285

Registered M. 916.

ஸ்ரீ:.

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்ய ஸபைப் பத்ரிகை.

ஸம்புடம் 3.] ப்ரமாதீச ஹு புரட்டாசி மீ. [ஸஞ்சிகை 8.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.


1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 281.
2. வேதாந்தார்த்த ஸங்க்ரஹம்
   ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் ... ... 291.
3. ஸுகந்யோபாக்யாநம்
   ஒரு பௌராணிகர் ... ... ... ... 300.
4. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்
   ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யர் ... ... 306.
5. வைதிக ஶாஸ்த்ர அத்யாபநம் ... ... ... 317.
6. கடிதங்கள் ... ... ... ... ... ... 319.


ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபையின் கார்யதர்ஶியால்
ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

Copy-right reserved.

Annual Subscription Rs. 2-0-0] [Single Copy As. 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

*Editor.*—S. VASUDEVACHARIAR B. A., L. T.

---

Vol. 3.-No. 8.

---

*September 1913.*


---

## NOTICE.

All contributions etc. should be addressed to **The Editor,** and all business letters, money orders etc. to **The Manager,** the Vedanta Dipika, 11 Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras. Communications intended for publication in the succeeding issue should, as far as possible, reach the Editor not later than the 15th of the month. The Secretaries of affiliated associations are requested to send in every month advertisements and reports of meetings for publication.

Subscribers are requested to send their subscriptions for Vol. 3 as early as possible. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர்" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும், கட்டணம் கட்டுவதும், விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும் "மானேஜர், வேதாந்ததீபிகை, கேசவப்பெருமான் ஸந்நிதிவீதி, மயிலாப்பூர்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

ஒவ்வொரு மாஸத்திலும் 15உக்குள் கிடைக்கும் விஷயங்கள் தான் அந்தந்த மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும். ப்ரதி மாஸமும் பிரிவுகளின் கார்யதர்ஶிகள் அங்கங்கு நடக்கும் விசேஷ வ்ருத்தாந்தங்களை தீபிகையில் ப்ரசுரம் செய்யும்பொருட்டு எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தா தாரர்கள் எல்லாரும் மூன்றாவது வருஷச் சந்தாவை விளம்பமில்லாமல் அனுப்பவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.**

287

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமடத்து ஶிஷ்யஸபைப் பத்ரிகை.

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 3.] ப்ரமாதீசஹ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 8.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே । வபுரளககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேঽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம். 1-9-33.]

ஈஶ்வர பக்தியும், ஸாமாந்ய தர்மாநுஷ்டாநமும்.

"அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ஶௌசமிந்த்ரியநிக்ரஹ: । தாநம் தமோ தயா க்ஷாந்தி: ஸர்வேஷாம் தர்மஸாதநம்" என்னும் ஶ்லோகத்தினல், ப்ராணி பீடையைச் செய்யாமலிருப்பது, உண்மை பேசுவது, திருடாமலிருப்பது, பாஹ்யமாகவும் ஆந்தரமாகவும் ஶுசியாக இருக்குந் தன்மை, புத்தியையும் கர்மேந்த்ரியங்களையும் நியதங்களான விஷயங்களில் ப்ரவர்த்திப்பிப்பது, ப்ராணிகளுக்கு யதாஶக்தி அந்ந பாநாதிகளைக் கொடுத்து உபகரிப்பது, அந்த: கரணத்தை அடக்குவது, ஆபந்நரைக் காப்பாற்றுவது, மற்றவர் தமக்குத் தீங்கு செய்தாலும் தாம் அவர்களைக்குறித்துச் சித்த விகாரம் அடையாமல் இருப்பது இவையெல்லாம் எல்லா மநுஷ்யர்களுக்கும் பொதுவான தர்மங்கள் என்று யாஜ்ஞ

வல்க்ய மஹர்ஷி சொல்லியிருக்கிருர். இவைகளைத் தர்மங்களென்று ஒத்துக்கொள்வதற்கு ஶாஸ்த்ரம் முதலிய ப்ரமாணம் அபேக்ஷிதமன்று; ஸாமாந்யமாக இவை ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டு ஆகின்றன என்னுங் காரணத்தினுலேயே இவைகளை அவஶ்யம் அநுஷ்டிக்கப்படவேண்டிய தர்மங்களென்று எல்லாரும் அங்கீகரிக்கக் கூடும். இவைகளைச் சரிவர அநுஷ்டித்து வந்தால் ஜகத்திற்கு ஶ்ரேயஸ் உண்டாகுமென்றும், இவைகளின் அநநுஷ்டாநமாவது விபரீதாநுஷ்டாநமாவது ஜகத்தின் ஸ்திதியைச் சீர்குலைத்துவிடு மென்றும் ப்ரத்யக்ஷமாகவே தெரிகின்றது. ஆகையால், ஐஹிக அபிவ்ருத்தியைத் தேடும் நாம், இம் மாதிரியான தர்மங்களுடைய அநுஷ்டாநத்தை மாத்ரம் லோபமடையவொட்டாமல் பாதுகாத்துவந்தால் போதாதோ? அப்ரத்யக்ஷமாக ஈஶ்வரன் என்று ஒருவன் உண்டு என்றும், அவனிடத்தில் எல்லாரும் பக்திசெய்யவேணுமென்றும் சொல்வது அவஶ்யமோ? என்று ஆதுநிகவித்வாங்களில் அநேகர் ஆக்ஷேபிக்கிருர்கள். இந்த ஆக்ஷேபத்தைக் கொஞ்சம் பரிஶீலநம் செய்து பார்ப்போம்.

இவர்களுடைய ஸித்தாந்தமாவது – அதீந்த்ரியமான வஸ்து உண்டு என்பதற்கு த்ருப்திகரமான ப்ரமாண மொன்றுமில்லை. ஶாப்தம் என்று நாம் ஒத்துக்கொள்ளும் ஆப்த வாக்யமெல்லாம் பௌருஷேயமானதனுல் ப்ரமவிப்ரலம்பாதிகளுக்குப் பாத்ரமாகும்; அவைகளை ஸரியான ப்ரமாணமாக அங்கீகரிப்பதும் ந்யாய்யமன்று; ஆப்த வாக்யமென்று நாம் ஒத்துக்கொண்டிருக்கும் இதிஹாஸ புராணங்களில் யுக்திக்கு விருத்தங்களான அநேக கதைகள் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிவோம். குணதோஷ விவேசநம் செய்யக்கூடிய ஶக்தியையுடைய நாம் அவைகளை யதார்த்தமென்று எவ்விதத்தில் நம்புவது? ஈஶ்வரன் உண்டு என்பதும், அவனிடம் நாம் பயந்து நடக்கவேண்டு மென்பதும், பாமர ஜநங்களுக்காக உத்தேஶிக்கப் பட்டவையேயன்றி, ப்ரபுத்தமான மநஸ்ஸை யுடைய விவேகிகளுக்காகச் சொல்லப்பட்டவையல்ல. பரிநிஷ்பந்நமான ஸம்ஸ்காரத்தை அடைந்திருக்கும் மநஸ்ஸை யுடையவர்கள், குணதோஷ விவேசநம் செய்து, யுக்திக்கு ஒத்தவைகளை க்ரஹித்து யுக்திக்கு விருத்தமானவைகளைக் கைவிடுவார்களே ஒழிய, ஆப்தவாக்யமென்கிற காரணத்தினுல்

மாத்ரம் எல்லாவற்றையும் தத்யமென்று நம்பிவிடமாட்டார்கள். பண்டைய காலத்தில் ஸத்துக்களையும் அஸத்துக்களையும் பகுத்தறியும் ஜ்ஞாநம் பரவாமல் இருந்தபொழுது, கீழ்க்கூறிய தர்மங்களின் அநுஷ்டாநத்திற்கு ஈஶ்வரபக்தி ஸாதகமாக் இருந்திருக்கக் கூடும்; அப்படி ஒருகாலத்தில் சிலருக்கு ஸாதகமாக இருந்த ஈஶ்வர பக்தியை ஸர்வகால ஸர்வஜந ஸாமாந்யமான அதிகாரமாக அங்கீகரிப்பது ந்யாய்ய மாகாது.

இதற்கு நிதர்ஶநமாக இரண்டொரு அநுபவத்தையும் அவர்கள் உதாஹரிக்கிறார்கள். ஆங்கல பௌமர்களுடைய தேஶமாகிற இங்கிலாந்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன்னே, இந்தப் பாரத வர்ஷமாகிற இந்தியாவில் இப்பொழுது இருப்பதுபோல, ஈஶ்வர பக்தி ஸர்வாதிகாரமாக க்ரஹிக்கப்பட் டிருந்தது என்றும், அப்பொழுது, அந்தத் தேஶத்திலுள்ள ஜநங்கள் தங்களுடைய புராணாதிகளில் எழுதப்பட்டுள்ள எல்லாக் கதைகளையும் உண்மையென்றே நம்பி யிருந்தார்களென்றும், காலக்ரமேண இக்காலத்திய ஶாஸ்த்ரஜ்ஞாநம் பரவிக் குணதோஷ விசாரம் செய்யக்கூடிய ஶக்தியும் அபிவ்ருத்தமாகவே, ஈஶ்வர பக்தியென்பது குறைந்து கொண்டே வந்துவிட்டது என்றும், அப்படி அது குறைவுபட்டதால் கீழ்க்கூறிய ஸாமாந்யதர்மங்களுக்கு யாதொருலோபமும் ஸம்பவிக்காமலே மேன்மேல் அந்தத் தேஶம் ஐஹிக ஶ்ரேயஸ்ஸில் வ்ருத்தியாகிக்கொண்டே வந்திருக்கிறதென்றும் இவர்கள் அறிகிறார்களாம். தவிரவும், இந்தத் தேஶத்திலே, ஈஶ்வர பக்தியுடையவர்கள் பலர் இருந்தாலும், அவர்களைவிட அப்படிப்பட்ட பக்தியற்றிருக்குமவர்களே ஜகத்தின் ஹிதத்திற்கு ஹேதுவாகும் ஸாமாந்ய தர்மங்களை அநுஷ்டிப்பதில் மிக்க ஶ்ரத்தை யுடையவர்களாகத் தென்படுகிறார்க ளென்பதும், ஈஶ்வரபக்தி யுள்ளவர்கள் அவ்வளவாக த்ருப்திகரமாய் அந்தத் தர்மாநுஷ்டாநம் செய்வதில்லை யென்பதும் இவர்களுடைய அநுபவமாம்.

இவர்கள், இப்படி ஈஶ்வர பக்தியின் அநாவஶ்யகதையை ஒருவாறாக ஸ்தாபித்துவிட்டு, இப்பொழுது வித்யாஶாலைகளில் வித்யார்த்திகளாகப் படித்துவரும் மாணவகர்களுக்கு ஈஶ்வர பக்தியை உபதேஶிப்பதும் அது ஸம்பந்தமான அநுஷ்டாநங்களைக்

கட்டாயப் படுத்துவதும் மிக்க ந்யாய விருத்தமென்றும் சொல்லுகிறார்கள். பாதிரிகளால் அதிஷ்டிதமான பாடஶாலைகளிலும், ஹிந்துக்களுடையவும் மஹம்மதியர்களுடையவுமான சில பாடஶாலைகளிலும் தைவ பக்தி ஸம்பந்தமான பாடங்கள் நடப்பதும், அது ஸம்பந்தமாகச் சில அநுஷ்டானங்கள் சில காலங்களில் அநுஷ்டிக்கப் படுவதும் ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இது மிகவும் பிசகு என்றும், மேன்மேல் உண்டாக வேண்டிய ஶ்ரேயஸ்ஸுக்கு இது ஓர் இடையூறாக இருக்கின்றது என்றும் இவர்கள் ஶோகிக்கிறார்கள். இது மாத்ரம் அன்று; வடக்கே கங்காதீரத்தை ஆஶ்ரயித்திருக்கும் தேஶங்களிலுள்ள அநேக ஆஸ்திகர்கள், இப்பொழுது இங்க்லீஷ் பாடஶாலைகளில் கேவலம் லௌகிக ஶாஸ்த்ராதிகளை அப்யஸித்துக்கொண்டு தைவமொன்று உண்டு என்கிற ஜ்ஞாநத்தின் போதமின்றிக்கே, பல பாலர்கள் வித்யா நிஷ்பத்தியடைவதைப் பார்த்து, 'இந்த ஸ்திதி ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸின் பொருட்டு ஆகாதே' என்று பயந்து, அதைச் சீர்திருத்தம் செய்ய முயன்றவர்களாய், அநேக லக்ஷக் கணக்கான ரூபாயைச் சேர்த்துக்கொண்டு ஆஸ்திக்யத்துடன் கூடிய வித்யாப்யாஸத்திற்கு உரிய பாடஶாலைகளை ஸ்தாபிக்கவும், அவைகளில் அந்த அப்யாஸத்திற்கு அநுகுணமான பரீக்ஷைகளை நடத்தவும், அந்தப் பரீக்ஷைகளில் நிஷ்பத்தியடையும் மாணவர்களுக்கு ராஜஸேவைக்கு வேண்டுவதான ராஜாங்கீகாரமாகிற ஸ்வரூப யோக்யதையை ஸம்பாதித்துக் கொடுக்கவும் மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வருகிறார்கள். ராஜ ப்ரதிநிதிகளும் இந்த ப்ரயத்நத்தை ஸாதுவென்றே க்ரஹித்து அதற்கு வேண்டிய ஸஹாயம் செய்வதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம். ஈஶ்வரபக்தியி லிருந்து நடுங்கும் நம்மவர்களுக்கு இதுவும் பெரியதொரு விபத்தாகத் தோன்றுகிறது. தைவ பக்தியை உபதேஶிக்கும் இம்மாதிரியான பாடஶாலைகள் உத்பந்நங்களாகிவிட்டால், பல பெயர்களுக்கு ஈஶ்வர பக்தி உண்டாகி ஜகத்திற்கு எப்படிப்பட்ட பெரிய தீங்கை விளைத்து விடுமோ? என்று பயந்து, இவர்கள் அந்த ப்ரயத்நத்திற்கு ராஜாங்கீகாரம் கிடைக்காம லிருப்பதற்கு உரிய வழியைத் தேடுகிறார்கள். தம்மைப்போன்ற அநேகரைக்கொண்டு ஸபைகளைச் சேர்த்து இதைப் பற்றிச் சர்ச்சை செய்து ராஜ ப்ரதிநிதிகளுக்குத் தங்களுடைய

அபிப்ராயத்தை உணர்த்துவதுடன், பத்ரிகைகளிலும் இந்த அக்ர மத்தைப்பற்றி அடிக்கடி உபந்யாஸாதிகளை எழுதி வருகிறார்கள். அர்வாசீந ஶாஸ்த்ரஜ்ஞாநத்திற்கும் ஈஶ்வர பக்திக்கும் ஸாமாநாதிகரண்யமில்லையென்றும், ராஜப்ரதிநிதிகள் ஈஶ்வர பக்தியின் உபதேஶத்திற்கு அநுமதி கொடுத்துவிட்டால் ஶ்ரேயஸ் ஸாதகமான சித்த ஸம்ஸ்காரமே ஜநங்களுக்கு உண்டாகாமல் போய்விடு மென்றும் இவர்கள் கதறுகிறார்கள். இவர்களுடைய நடவடிக்கையைப்பற்றி நாம் என்னசொல்லலாம்?

"அஹோ ப³த மஹத்கஷ்டம் விபரீதமித³ம் ஜக³த் ।
யேநாபத்ரபதே ஸாது⁴ரஸாது⁴ஸ்தேந துஷ்யதி ॥"

எந்த அகார்யத்தைச் செய்வதற்கு ஸாத்விகர்கள் நடுங்குவார்களோ, அந்த அகார்யமே இவர்களுக்கு ஸந்தோஷகரமாகின்றது. தைவபக்தி இல்லாமல் ஐஹிகபோகத்தையே பெரிதாக நினைத்துக் கஷ்டப்படும் ஜநங்களைப் பார்த்து ஶோகிப்பது போக, இவர்கள், அந்த ஜநங்களுடைய ஸாந்நித்யத்தில் அதிமாத்ரம் உத்ஸாஹம் கொள்ளுகிறார்களே! இது என்ன வைபரீத்யம்?

ஈஶ்வரன் ஒருவன் உண்டு, ஜீவகோடிகள் எல்லாம் ஸர்வ ப்ரகாரத்தாலும் அவனுக்கு ஶேஷ பூதர்கள் என்று உணரும் நமக்கு, 'இவ்விதமாகப் பேசுபவர்களும் இருக்கிறார்களோ?' என்று தோன்றக்கூடும். விசித்ர ஸ்ருஷ்டி யடங்கிய இந்த ப்ரபஞ்சத்தில் இவர்களைப் போன்றவர்களும் இருந்தே தீரவேணும். முற்காலத்திலும் கபில மதாநுஸாரிகளான அநேகர் இருந்ததை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஜகத்தின் அநுபவத்தைப் பரிபூர்ணமாக அறியாமல், யானையைக் கண்ட குருடர்கள் போல, தங்கள் தங்களுடைய பரிமிதமான அநுபவத்தையேகொண்டு, எல்லாருக்கும் ஆதிகர்த்தாவாகிய ஈஶ்வரனை அபலாபஞ்செய்ய முயலும் இவர்கள் விஷயத்தில் நாம் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை மாத்ரம் அவலம்பித்து அதீந்த்ரியமான பொருள்களில் விஶ்வாஸ மின்றிக்கே இருப்பவர்களுக்கு ஈஶ்வர பக்தியைப் பற்றிப் பேசுவது அரண்ய ருதிதமாகு மாதலால், அது விஷயத்தில் நாம் ப்ரவ்ருத்திசெய்யத் துணியவில்லை. ஆனாலும், எந்த ப்ரத்யக்ஷ அநுபவத்தை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு

இவர்கள் கேவல ஸாமாந்ய தர்ம அநுஷ்டாநம் போதுமென்று சொல்லுகிறார்களோ, அந்த அநுபவம் ஸரியன்று என்று மாத்ரம் நாம் சொல்லவேண்டியது அவச்யமாகின்றது.

ஈச்வர பக்தியுள்ளவர்களிடம் ஸரியான தர்மாநுஷ்டாநமில்லை என்று சொல்வதும், சில தேசாந்தரங்களில் காலக்ரமேண ஈச்வர பக்தி லோபமடைந்துகொண்டு வருகிறது என்றும் அது லோபமடைவதனால் ஸாமாந்ய தர்மாநுஷ்டாநமும் ஐஹிக ச்ரேயஸ்ஸும் வ்ருத்தியாகின்றன என்றும் சொல்வதும், ஸரியான அநுபவங்களல்ல. அந்தத் தேசாந்தரங்களில் ஈச்வர பக்தியுள்ள ஸாதுக்கள் பலர் இருப்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட பக்தி மேன்மேல் வ்ருத்தியாவதனால் தான் அவ்விடங்களில் ஐஹிக ச்ரேயஸ் அபிவ்ருத்திமாகி வருகின்றது என்பது நம்முடைய அபிப்ராயம். உண்மையாகவே, 'ஈச்வரன் ஒருவன் உண்டு, அவனுக்குப் பயந்து நடக்கவேணும்' என்கிற ஜ்ஞாநம் இல்லாதவர்களிடத்தில் தர்மா தர்ம விவேகம் எப்படி ஸம்பவிக்கும்? ஈச்வர பக்தி இல்லாவிட்டால், கேவலம் ஸ்வகார்ய பரர்களும் ஆத்மத்ருப்தியைத் தேடும் ஸ்வபாவமுள்ளவர்களுமான ஜநங்களடங்கிய இந்த ப்ரபஞ்சத்தில், ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு அவச்யம் அபேக்ஷிதமென்று எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படும் தர்மாநுஷ்டாநம் எவ்விதமாக நடைபெறும் என்பதே நமக்குத் தெரியவில்லை. எல்லாரும் அஸத்யம் பேசுவதிலும் பர ஸ்வாபஹாரம் செய்வதிலுமே முயன்று, ஜகத்துக்கு அளவற்ற தீங்கை விளைவித்துவிடுவார்களென்றே நமக்குத் தோன்றுகிறது. தர்மாநுஷ்டாநம் முழுவதும் ஸ்திரமாக இருக்கவேண்டுமானால் ஈச்வர பக்தியைக் கொண்டே அதை ஸாதித்துக்கொள்ளவேணுமே தவிர வேறு ஸரியான மார்க்கம் கிடையாது.

மேலும், ஈச்வர பக்தி எவ்விதத்தில் சித்த ஸம்ஸ்காரத்திற்கு விருத்தம்? என்பதை நாம் அறியோம். ப்ரத்யுத, சித்தம் தெளிந்து நல்ல ப்ரபோதம் உண்டாவதற்கு ஈச்வர பக்தியே ஹேதுவாகின்றது என்பதும், ஈச்வர பக்தர்களிடத்திலேதான் உதாரமான ஆசயம் காணப்படுகிறதே தவிர மற்ற எவரிடத்திலும் அந்த ஔதார்யம் காணப்படவில்லையென்பதும் நம்முடைய அநுபவம். நம்மை ஸ்ருஷ்டித்து ஸர்வ காலத்திலும் பாதுகாத்து நம்மிடத்தில் அளவற்ற க்ருபையுடன் நம்மை அநு

க்ரஹித்துவரும் பகவான் எவ்விடத்திலும் நிறைந்து இருக்கிறான் என்று உணருமவர்களுக் கல்லாமல் மற்றை எவர்களுக்கு ஸர்வபூத ஸௌஹார்த்தமாகிற ஔதார்யம் ஸம்பவிக்கும்? தவிரவும், ஆதுநிக ஶாஸ்த்ர ஜ்ஞாநமும் ஈஶ்வர பக்தியும் எப்படி விருத்தங்கள்? இந்த ஶாஸ்த்ரத்தை உபதேஶிக்கும் பாடஶாலைகளில் ஈஶ்வர பக்தியை உபதேஶிக்க ப்ரயத்நப்படுவது ஶைத்ய ஸ்தாநமான ஜலமிருக்குமிடத்தில் வஹ்நியை வளர்ப்பதுபோல உந்மத்த க்ருத்யமாகின்றது என்று இவர்கள் பரிஹஸிப்பதற்குக் காரணம் யாதோ? ஈஶ்வர பக்தனாக இருக்கிறவன், அந்த ஈஶ்வரனுடைய விபூதியாகிற இந்த ப்ரபஞ்சத்தின் யாதார்த்யத்தை அறியக்கூடாதோ? ஈஶ்வரனிடத்தில் பக்தி பண்ணும் மாத்ரத்தால் ஒருவன் குணதோஷ விவேசநம் செய்யும் ஶக்தியை இழந்துவிடுகிறான் என்று சொல்வது கேவலம் ஆக்ரஹிகள் சொல்லும் வார்த்தையே ஒழிய விவேகிகள் சொல்லும் வார்த்தையாகுமா? அதிமாநுஷமான கார்யங்களை ஈஶ்வரன் அவதார தஶையில் தானே செய்ததாகவும், மற்றைத் தஶைகளில் இதரர்களைக் கொண்டு செய்வித்ததாகவும் இதிஹாஸ கதைகளில் சொல்லப்பட்டிருந்தால், அவைகள் ஏன் அஶ்ரத்தேயங்கள் ஆகவேணும்? அகடித கடநா ஸமர்த்தனாகவும் ஸர்வ ஶக்தனாகவுமுள்ள ஈஶ்வரன் விஷயத்தில், ஒவ்வொரு க்ஷணத்திலும் விவிதமான விகாரத்தை அடைந்து கொண்டிருக்கும் அதிஸங்குசிதமான நம்முடைய புத்தி ஶக்தி எம்மாத்ரம்? இன்ன இன்ன பதார்த்தங்களை அறிவதற்கு இன்ன இன்ன ஶக்தி வேண்டுமென்கிற ஆநுகுண்ய ஜ்ஞாநம் கூடவா நமக்குக் கைதவறவேணும்?

ஸர்வரும் ஸர்வத்தையும் நம்பிவிடவேண்டும் என்பது நம்முடைய அபிப்ராயமன்று. நம்முடைய புத்தி ஶக்தியைக்கொண்டு பதார்த்தங்களின் குணதோஷ விவேசநம் செய்து, குணவத்தை க்ரஹித்து தோஷ துஷ்டங்களை த்யஜிக்கவேணும் என்பதே நம்முடைய கருத்து. ஆனால், 'தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்மா ஒன்று இருக்கின்றது அதற்கு ஸ்வாமியாகவும் ரக்ஷகனாகவும் பகவான் ஒருவன் உண்டு' இத்யாதியான அதீந்த்ரிய விஷயங்களில் நம்முடைய ஜ்ஞாநேந்த்ரிய கர்மேந்த்ரியங்களைக்கொண்டு நாம் ப்ரவ்ருத்தித்து, அவாங் மநஸ கோசரங்களான ஈஶ்வரனுடைய சேஷ்டிதங்களை அறியவும் அவைகளின்

ஸாத்வஸாது பாவத்தை நிர்ணயிக்கவும் நாம் முயல்வது மௌட்ய பரீவாஹமே யாகும் என்று நமக்குத் தோன்றுகிறது. இம்மாதிரியான அதீந்த்ரிய விஷயங்களில், மஹா ஜ்ஞாநிகளான ஆப்தர்களால் கூறப்பட்டுள்ள ப்ஸ்ருதி ஸ்ம்ருதிகளின் வாக்யங்களை நம்பி அவைகளின்படி நடந்து ப்ஸ்ரேயஸ்ஸை நாம் தேடிக்கொள்வது தான் நமது தர்மமாகுமென்பது நம்முடைய அபிப்ராயம். இப்படி ஆத்யந்திக ஸ்ரேயஸ்ஸை அறியாமல், தம்முடைய ஸங்குசிதமான புத்தியை அஸ்கலந ஸீலமென்று நினைத்து, ஐஹிகமான பதார்த்தங்களைத்தவிர வேறு ஒன்றுமில்லையென்று சொல்லிக்கொண்டு, பின்னால் வரும் அநுபந்தத்தைப் பாராமலே ப்ரவ்ருத்திக்குமவர்களை அத்யந்தம் அந்தகர்களென்றே நாம் நினைக்கிறோம். தங்களுடைய நாஸத்தை ஸம்பாதித்துக் கொள்வதுடன், இவர்கள் பரதந்த்ர ப்ரஜ்ஞர்களான கணக்கற்ற ப்ரஜைகளது நாஸத்துக்கும் காரணமாகிவிடுகிறார்களே! எல்லாரையும் ஸதா ஸம்ரக்ஷித்துவரும் பகவான் இவர்களுக்கு நல்ல புத்தியைக்கொடுத்து ஆஸந்நமாக இருக்கும் இந்த ஆபத்திலிருந்து ஜகத்தைத் தப்புவிக்கும்படி க்ருபை செய்யவேணுமென்பது நம்முடைய ஸார்வகாலிக ப்ரார்த்தனை.

"ഹൎക്ഷ്യാ ത്ഥൈവ്യ ദ്ധിജ്ഞം ഊൎദ്ധ്വാ ബഹിശ്ശോയഹം ।
ക്ഷണ്ഡാഹിരാഷീ ഗൃഹതേ നാനാബംധഊവേക്ഷതേ ॥"

"The angels from their home above
Look down on us with pitying eye,
That where we are such passing guests
We build such strong and solid nests,
And where we hope to live for aye
We scarce take heed one stone to lay."

∴ ∴ ∴

**ஸ்ரீ அஹோபிலம்.** சென்ற விரோதிக்ருத் வர்ஷம் மார்கழி தை மாஸத்திய ஸஞ்சிகைகளில், ஸ்ரீ அஹோபிலத்திலுள்ள ஸ்ரீ ந்ருஸிஹ்மன் ஸந்நிதியின் தைந்ய தஸையைப் பற்றி நாம் விஸ்தாரமாக எழுதியிருந்தோம். கீழ்அஹோபிலம் மேல்அஹோபிலம் என்ற இரண்டு இடங்களிலுமுள்ள ஸந்நிதிகள் அத்யந்தம் ஜீர்ணமாக இருக்

கின்றன என்றும், இரண்டு இடங்களிலும் ஆராதநாதிகள் ஸரிவர
நடந்துவர வில்லையென்றும், உத்ஸவகாலங்களில் ஸேவார்த்தி
களாக அவ்விடத்தில் வந்து சேரும் ஜநங்கள் வஸிக்க ஸ்தலமில்
லாமலும் பாநத்திற்குத் தகுந்த தீர்த்த மில்லாமலும் அளவற்ற
கஷ்டத்தை அநுபவிக்கிறார்களென்றும், அந்த ஸந்நிதியின் பரிபா
லந ஸம்பந்தம் பெற்றவர்கள் அது விஷயமாக மஹத்தான ஔ
தாஸீந்யத்தை வஹிக்கிறார்களே தவிர யதோசிதம் ஶ்ரத்தாளுக்
களாகக் காணப்பட வில்லையென்றும் விஸ்தரித்து எழுதி, இந்
தத் துர்தசையை ஶீக்ரத்தில் நிவ்ருத்தி செய்ய வேண்டுவதற்கு
உரிய முயற்சிகளை அந்த ஸந்நிதியின் தர்மகர்த்தாவாகிய ஸ்ரீ அழ
கிய சிங்கர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ அழகிய
சிங்கரை ப்ரார்த்தித் திருந்தோம். அந்த ப்ரார்த்தனை இதுவரை
யில் கொஞ்சமாவது கவனிக்கப்பட்டதாக யாதொரு சிஹ்நமும்
காணப்படவில்லை. இப்பொழுது முன் போலவே ஆராதநாதி
கள் அத்யந்தம் அநியதங்களாகவே இருக்கின்றனவாம். சில மாஸ
ங்களுக்கு முன்னே அநுஸ்யூதமாகப் பதினாறு தினங்கள் இந்த
இரண்டு ஸந்நிதிகளுள் ஓரிடத்திலாவது ஆராதநமே நடக்க
வில்லையென்றும், இதைப்பற்றிச் சிலர் அந்த ஜில்லா கலெக்டர்
அவர்களுக்கு மனுச்செய்துகொண்டதின்பேரில் 'ஏன் அவ்
விதமாக ஆராதநம் நிற்கவேணும்?' என்று அவ்விடத்துத் தாசீல்
தார் கலெக்டருடைய உத்தரவின்படி அர்ச்சகரைக் கேட்டதற்
குத் தன்னுடைய சம்பளம் ஸரிவரக் கொடுக்கப்படாததால் தான்
ஆராதநத்தை நிறுத்திவிட்டதாக அர்ச்சகர் வாக்மூலம் கொடுத்
திருக்கிறானென்றும், அர்ச்சகர் சொல்வது உண்மையென்று அங்
கிருக்கும் டெபுடி ரேஞ்ஜர் ஒருவர் அதை உறுதிசெய்திருக்கிறா
னென்றும், இது ஸம்பந்தமான ரிபோர்ட் கலெக்டருக்குச்
சேர்ந்தவுடன் கலெக்டர் அங்கிருக்கும் முத்தாக் கர்த்தாவை
அதற்கு ஸமாதாநம் சொல்லும்படி கேட்டிருக்கிறா னென்றும்
இப்பொழுது நாம் கேள்விப்படுகிறோம். இது மிகவும் ஶோச்ய
மாக இருக்கின்றது. ஸ்ரீ அழகியசிங்கர் இந்த ஸந்நிதி விஷயத்
தில் இவ்வளவு பராங்முகராக இருப்பது அவருடைய யோக்
யதைக்குக் கொஞ்சமேனும் அழகன்று.

தவிரவும், இந்த ஸந்நிதியின் ஜீர்ணோத்தாரண விஷயமாகக்
கவர்ன்மெண்டார் இவர்களைச் செய்யும் நிர்பந்தமும் அவ்வள

வாக ஸபலமானதாகத் தெரியவில்லை. 1901-ம் வருஷம் முதல், இது ஸம்பந்தமாக ரிவின்யு போர்டாரும் டிவிஷனல் ஆபீஸர்களும் மிகுந்த பரிஸ்ரமம் எடுத்துக்கொண் டிருப்பதாக அறிகிறோம். அநேக கலெக்டர்கள் அநேக காலங்களில் ஸந்நிதியை நேரில் பார்வையிட்டு அதைப் பற்றிய ரிபோர்ட்டுகளைப் போர்டாருக்கு அனுப்பி யிருப்பதாகவும், போலிஸ் உத்யோகஸ்தர்களிற் சிலர் இந்த ஸந்நிதியின் ஸாபாயமான ஸ்திதியைப் பார்த்து அதைக் கால வ்யதிக்ரமமின்றிக்கே உத்தாரணம் செய்யவேண்டுமென்று பலமான லேகங்கள் எழுதியிருப்பதாகவும் ஜநஸ்ருதி காதில் விழுகிறது. ஒன்றுக்காவது ஸ்ரீ ஸந்நிதியைச் சேர்ந்தவர்கள் இணங்கக் காணோம். சென்ற வருஷத்தில் நடந்த உத்ஸவ காலத்தில் ஸேவார்த்திகளாக வந்திருந்தவர்களில் பலர் ஒன்று சேர்ந்து ஒரு ஸபை கூடி, இந்த ஸந்நிதி ஸம்பந்தப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்விப்பதற்கு உரிய ப்ரயத்நங்களைச் செய்யும் பொருட்டு ஒரு கமிட்டியாரை நியமித்ததாகவும், அந்தக் கமிட்டியார், ஸந்நிதியின் உத்தாரணத்திற்கும் தீர்த்த ஸௌக்யத்தை உண்டுபண்ணுவதற்குமாக ஸந்நிதி ஏஜன்டை ரூ. 500 தாலூகாக் கோஶத்தில் ந்யாஸமாக வைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறதாகவும் ஸமீபகாலத்திய ஸமாசாரம். இதன் நிஷ்பத்தி காலக்ரமேண தெரியவேணும். அங்குள்ள ஸேவார்த்திகளின் ஆர்த்தியைப் பரிஹரிக்கும்பொருட்டாவது ஸ்ரீ அழகிய சிங்கர் அந்த ஸந்நிதியை ஜீர்ணோத்தாரணம்செய்து அந்த ப்ரதேஶத்தை வாஸத்திற்கு ஸுகமாகச் சீர் திருத்தவேணுமென்று மறுபடியும் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

# வேதாந்தார்த்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

## ஶாஸ்த்ரயோநித்வாதிகரணம். ௩.

முன் இரண்டு அதிகரணங்களில், ஸித்த விஷயத்தில் வ்யுத்பத்தி கூடுமாகையாலும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமிருப்பதாலும், ப்ரஹ்மத்தை அறிய வேதாந்த விசாரம் செய்யவேண்டுமென்னப்பட்டது. 'ப்ரஹ்மத்தை யறிய வேறு மார்க்க மில்லையோ? அநுமாநத்தினு லறியக்கூடாதோ?' என்கிற ஸம்ஶயத்தை அடுத்த அதிகரணத்தில் நிவர்த்திக்கிறுர்.

ஶாஸ்த்ரயோநித்வாத் (க. க. ௩.)

ஶாஸ்த்ரம் ஒன்றையே (அறிவதற்குக்) காரணமாய்க் கோண்டிருப்பதால்.

வேதாந்திகள் ஒத்துக்கொண்ட ப்ரமாணங்கள் - ப்ரத்யக்ஷம், அநுமாநம், ஶப்தம் (அல்லது ஆகமம்) ஆகிய மூன்றே. இந்த ஆகமத்தையே ஶாஸ்த்ரம் என்றும் வேதமென்றும் சொல்வதுண்டு. 'இது செய்யவேணும், இது செய்யக்கூடாது' என்று ப்ராயேண விதிப்பதால் வேதங்களுக்கு ஶாஸ்த்ரம் எனப் பெயர் வந்தது. "அப்ராப்தே து ஶாஸ்த்ரமர்த்தவத்" [அதாவது - 'வேறு ப்ரமாணத்தால் கிடைக்காததை விதிப்பதாலேயே ஶாஸ்த்ரம் ப்ரயோஜநமுள்ளது'] என்று மீமாம்ஸகர்கள் சொல்வார்கள். ஜ்யோதிஷ்டோமாதிகளை வேதம் விதிக்காத வரையில் ப்ரத்யக்ஷ அநுமாநங்களால் அவைகள் பலங்கொடுக்கும் க்ரியைகளென்று அறிவது கூடாது. அப்படியே ஶாஸ்த்ரம் ப்ரஹ்மவிஷ

யத்தில் ப்ரமாணமாக வேண்டுமானல், அதற்கு வேறு ப்ரமாணம் ஸாதகமாகக் கூடாது.

இங்கே நையாயிகர்கள் பூர்வபக்ஷம் செய்கிருர்கள். ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மத்தை அறிவிக்கக் கூடியதன்ருகிலும், அநுமாநத்திஞல்* ப்ரஹ்மம் என்னும் ஈஸ்வரனை அறிவது கூடும். "ஜகத் ஸகர்த்ருகம், கார்யத்வாத்" [இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தவர் ஒருவர் இருக்கவேணும்; அது கார்யமாகையால்] என்றும், "ஜகத் ஸர்வவித்கர்த்ருகம், கார்யத்வாத்" [இந்த ஜகத்துக்கு எல்லாமறிந்த ஒரு ஸ்ரஷ்டா இருக்கவேணும்; அது கார்யமாகையால்] என்றும், இது போன்ற மற்றை அநுமாநங்களாலும் இந்த ப்ரபஞ்சமெல்லாம் ஸர்வஜ்ஞத்வமும் ஸர்வஶக்தியுமுள்ள ஒரு சேதநவிஶேஷத்தால் உண்டாயிருக்க வேணும் என்று நாம் அறிகிருேம். அப்படிப்பட்ட சேதந விஶேஷம் நம்மைப்போலிருந்தால் இவ்வளவு விசித்ரமான ஜகத்தைப் படைப்பது கூடாது; ஆகையால், ஸர்வ விலக்ஷணமாய் ஸர்வஜ்ஞராய் ஸர்வஶக்தராய் ஒரு ஈஸ்வரன் அநுமாநத்திஞலே ஏற்படுகிருர். அந்த ஈஸ்வரஞகிய ப்ரஹ்மத்தை அறிய வேதமே ப்ரமாணமென்று சொல்வது கூடாது. 'பூமி, மலைகள் முதலானவைகள் ஒருவரால் செய்யப்பட்டனவே; அவயவங்களுடனிருப்பதால்; இதற்கு கடம் த்ருஷ்டாந்தம்' என்பது முதலான அநுமாநங்களால் ஜகத்தைக் கார்யமாகவே சொல்லவேணும். கார்யமென்று ஏற்பட்டால் அந்தக் கார்யத்தை நிர்வஹிக்கக்கூடிய ஶக்தியுள்ள ஒரு கர்த்தாவே அநுமிக்கப்படவேண்டும்.

---

* அநுமாநமாவது - 'இந்த மலை, நெருப்புள்ளது; புகையுடனிருப்பதனல்' என்பது போன்ற வாக்யம். இதில், மலையில் நெருப்பின் இருத்தலை அறிய, புகை அடையாளமாகிறது. அதாவது - புகை என்னும் குறியால், மலையில் நெருப்பை ஊஹிக்கிருேம். 'மலை' - பக்ஷம், 'புகை' - ஹேது (லிங்கம்) என்றும் சொல்லப்படும், நெருப்பு ஸாத்யம் என்னப்படுகிறது. 'புகை யிருக்குமிடமெல்லாம் நெருப்புண்டு' என்னும் நியமம் வ்யாப்தி என்னப்படும். பக்ஷத்தில் ஹேது இருப்பதைக் கொண்டு ஸாத்யமுண்டென்பது அநுமாநம்.

மேலும், ஸர்வ சேதநர்களாலும் செய்யப்படும் தர்மாதர்ம ரூபமான செயல்களுக்குத் தக்கபடி பலங்களைக் கொடுக்கும் ஸாமர்த்யமுள்ள ஸர்வஜ்ஞரான சேதநர் ஒருவர், வேண்டும். அவர்தான் ஈஸ்வரன் என்று அநுமாநத்தினால் ஸாதிக்கிறோம். மேலும், ஶரீர மில்லாவிடினும் ஈஸ்வரன் ஸர்வத்தையும் நிய மிக்கக்கூடும். அவருக்கு 'மநஸ்' இருப்பதாய் ஒத்துக்கொள்ளு கிறோம். ஸர்வ வ்யாபியானவருக்கு ஶரீரமில்லாவிட்டாலும் நித்ய மான மநஸ் இருப்பதால் அவர் ஸர்வ வஸ்துக்களின் ஸ்வபா வத்தையும் ஶக்தியையு மறிந்து அவைகளை நியமிக்க வல்லவ ராகிறார். இதனால், ஒருகடத்துக்கு (பானைக்கு) உபாதாந கார ணம் மண்ணும் நிமித்தகாரணம் குயவனுமாயிருப்பது போல, இந்த ஜகத்துக்கு உபாதாநகாரணமா யிராமல் நிமித்தகாரண மாக மாத்ரம் அநுமாநத்தினால் ஈஸ்வரன் அறியக் கூடியவரா கையால் அப்படி ஸித்தமான ஈஸ்வரனாகிய ப்ரஹ்மத்தை ஸாதி க்க "யதோவா இமாநி" முதலான வேதாந்த வாக்யங்கள் வேண்டுவதில்லை. இதனால் வேதாந்தவிசாரம் செய்யத்தக்கதில்லை என்றதாயிற்று.

இந்தப் பூர்வபக்ஷத்தை ஸூத்ரம் நிராகரிக்கிறது. ப்ரஹ்மம் அநுமாநத்தினால் அறியக்கூடியதில்லை. அது ஶாஸ்த்ரமென்னும் வேதத்தினாலேயே அறியக்கூடியது. 'ஜகத் கார்யம்' என்பதற்குச்சொன்ன அநுமாநங்கள் ஜகத்துக்கு ஒரே கர்த்தாவென்றும் அவர் ஜீவாத்மாக்களைக்காட்டிலும் விலக்ஷணர் என்றும் ஸாதிக்கமாட்டா. எல்லா மலைகளையும் ஸமுத்ரங்களையும் வ்ருக்ஷங்களையும் ஒருவரே ஒரே காலத்தில் ஸ்ருஷ்டித்தாரென்று நாம் அநுமாநத்தினால் நிர்ணயிக்கமுடியாது. ஒரே கட்டடத்தைப் பல பேர்கள் பல காலங்களில் கட்டிமுடிப்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால், 'கார்ய மாகையால்' என்கிற ஹேது, 'புத்தியுள்ள ஒரே கர்த்தாவையுடையது' என்று ஸாதிக்கும் விஷயத்தில் 'அநேகாந்தம்' என்கிற தோஷமுள்ளது. [அதாவது - கார்யத்வ மென்னும் ஹேது ஒருவரால் செய்யப்படும் குடம் முதலானவைகளிலும் பலரால் செய்யப்படும் ரதம் கோபுரம் முதலானவைகளிலு மிருப்பதால்,

ஸபக்ஷத்துக்கும் விபக்ஷத்துக்கும் பொதுவான இந்த ஹேதுவால் ஜகத் ஒருவரால் உண்டாக்கப்பட்டதென்று நிஶ்சயிக்கமுடியாது.] மேலும், விசித்ர ஶக்தியுள்ள மநுஷ்யர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். விஶ்வாமித்ராதிகள் வேறு லோகங்களையும் ஸ்ருஷ்டித்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றன. ஆகையால், அப்படிப்பட்ட ஶக்தியுள்ள ஜீவன் ஒருவனே ஜகத்தை ஸ்ருஷ்டித்திருக்கக்கூடுமாகையால், அநுமாநத்தினால் ஜீவ விலக்ஷணமான ஈஶ்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டித்ததாக ஏற்படாது.

மேலும், ஈஶ்வரன் அநுமாநத்தினால் ஏற்பட்டாலும், அவருக்கு ஶரீரம் இருக்கவேண்டுமென்றாவது இல்லையென்றாவது அநுமாநத்தினால் நிர்ணயிக்கமுடியாது. ஶரீர மில்லாவிட்டால் அவர் ஸ்ருஷ்டிக்க முடியாது. ஶரீரமில்லாதவர்கள் ஒரு கார்யத்தையும் செய்வதை நாம் பார்த்ததில்லை. ஶரீரமிருக்கிறதென்றாலும் அது நித்யமான ஶரீரமாகில் அவயவங்களோடு கூடி நித்யமாயிருப்பதுபோலக் கார்யமான ஜகத்தும் ஈஶ்வரனில்லாமலே நித்யமாயிருக்கக் கூடுமானதால் ஈஶ்வரன் ஸித்திக்கமாட்டார். அநித்யமாகில், அதன் உத்பத்திக்கு அஶரீரியான ஈஶ்வரன் காரணமாகமாட்டார்.

இந்தக் காரணங்களால் அநுமாநத்தினால் ஜீவ விலக்ஷணமாய் ஸர்வஶக்தரான ஒரு ஈஶ்வரன் ஸித்திக்கிறதில்லை. 'ப்ரத்யக்ஷத்தாலும் ஈஶ்வரனை அறிவது கூடாதாகையால், ஶாஸ்த்ரத்தாலேயே ப்ரஹ்மத்தை அறியவேண்டும். ஆகையால், "யதோ வா இமாநி" முதலான வாக்யம் ப்ரஹ்மத்தை அறிவிக்கிறது என்பது ஸித்தம். அவயவங்களுடன் கூடினதல்லாத ஆகாஶம் முதலான த்ரவ்யங்களும் ப்ரஹ்மத்தினிடம் உண்டான வஸ்துக்களென்பது மேல் (க. ச. உ௩, உ - ௩ - 1) ஸூத்ரங்களில் உபபாதிக்கப்படும்.

---

## ஸமந்வயாதிகரணம். ச.

ப்ரஹ்மம் ஶாஸ்த்ரத்தினுலேயே அறியப்படவேண்டியது என்று சொல்லப்பட்டது. ஆனல், இந்த விஷயத்தில் மீமாம்ஸகர்கள் மறுபடி ஒரு ஆக்ஷேபம் செய்கிருர்கள். அதாவது - வேத வாக்யங்களெல்லாம் நாம் விரும்பும் பலத்தை உத்தேசித்து நம்மை ஏவுதலாலும், நமக்கு அநிஷ்டமான பலத்தைக் கொடுக்கும் கார்யங்களிலிருந்து, நம்மை விலக்குவதாலும் மாத்ரம் ப்ரயோஜநமுள்ளவைகள். ஆகையால், ஏவுதல் விலக்குதலான இரண்டிலொன்றல்லாத ஸித்தமான ப்ரஹ்ம வஸ்துவைப் போதிக்கும் வேதமாகிய ஶாஸ்த்ரம் நமக்கு ஒரு ப்ரயோஜநத்தையும் கொடுக்கக் கூடியதன்றுகையால் அந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கத் தகுந்ததில்லை என்பது தான். இதை அடுத்த ஸூத்ரம் பரிஹரிக்கிறது.

தத்து ஸமந்வயாத். க. க. ச.

(ப்ரஹ்மம், புருஷார்த்தமாக) நன்ருய் அந்வயிப்பதால், அந்த ஶாஸ்த்ரயோநித்வம் ஸித்திக்கிறது.

இங்கே பூர்வபக்ஷியின் அபிப்ராயம் என்னவென்ருல் :— ஒரு ப்ரயோஜநத்தை உத்தேஶிக்காமல் லோகத்திலாவது வேதத்திலாவது வாக்யங்கள் உபயோகிக்கப்படுகிறதில்லை. 'த்ரவ்யம்வேண்டியவன் ராஜஸேவை செய்யவேணும்,' 'ஸ்வர்க்கம் விரும்புவோன் யாகம் செய்யவேணும்' என்கிற வாக்யங்கள் ஒவ்வொரு பலத்தை உத்தேஶித்து ஒவ்வொருவனை ஏவுகின்றன. அப்படி ஏவுதல்பொருள்படாத 'உனக்குப் புத்ரன் ஜநித்திருக்கிருன்' 'இது ஸர்ப்பம் அன்று' என்னும் வாக்யங்களும் ஸந்தோஷம், பயநிவ்ருத்தி முதலான பலங்களை உண்டாக்குகின்றன வாகிலும், இவைகளைக் கேட்டமாத்ரத்தால் ஸந்தோஷம் முதலானவை உண்டாவதால், அவைகளின் அர்த்தமாகிய புத்ரஜநநம் முதலானவையும் வாஸ்தவமாக இருக்கவேணுமென்பது நிர்ப்பந்தமில்லை. ஆகையால், ப்ரஹ்ம விஷயமான வாக்யங்கள் வேதத்தின் விதி வாக்யங்களில் சேர்ந்தவை யல்ல வாகையாலும், அப்படிச் சேர்ந்தனவாகிலும் அவைகளுக்குத் தனது அர்த்தம் ஸத்யமாயிருப்பதில்

தாத்பர்யம் இருப்பது நிஸ்சயமில்லை யாகையாலும், வேதவாக்யங்களால் ஸித்தமான ப்ரஹ்மவஸ்து அறியக்கூடியதில்லை.

வேதவாக்யங்களில் விதி நிஷேத வாக்யங்களே ஸாக்ஷாத்தாய் ப்ரயோஜநமுள்ளவைகள். அவை 'யஜேத ஸ்வர்க்ககாமஃ' [ஸ்வர்க்கம் விரும்புவோன் யாகம் செய்யவேண்டும்] முதலான வாக்யங்கள். விதி நிஷேதங்களல்லாதவைகள் மந்த்ரங்களென்றும் அர்த்தவாதங்களென்றும் நாமதேயங்களென்றும் பிரிக்கப்படுகின்றன. அவைகளில், மந்த்ரங்கள் - யாகத்தில் உத்தேஸ்யமான தேவதையையும், உபயோகப்படும் த்ரவ்யங்களையும் இன்னும் செய்யவேண்டிய மற்றைக் கார்யங்களையும் ஸ்மரிப்பிக்கின்றன. அர்த்தவாதங்கள் - யாகத்தில் அதிகாரிகளுக்கு ருசி பிறக்கவேண்டியதற்காக, மேற்சொன்ன த்ரவ்ய தேவதாதிகளை ஸ்துதிசெய்கின்றன. அவைகளுக்கு இந்த ஸ்தோத்ரத்தில் தாத்பர்யமே ஒழியத் தனது அர்த்தத்தில் தாத்பர்யமில்லை என்பது மீமாம்ஸகர்கள் கொள்கை. நாமதேயங்கள் - யாகங்களுக்குப் பெயர்களைச் சொல்லுகின்றன. 'உத்பிதா யஜேத' 'அக்நிஹோத்ரம் ஜுஹோதி' முதலான வாக்யங்களால் 'உத்பித்' 'அக்நிஹோத்ரம்' என்று பெயருள்ள கர்மங்கள் சொல்லப்படுகின்றன. இப்படி வேதம் முழுவதிலும் விதிகளாயாவது விதிஸம்பந்த முள்ளவைகளாயாவது இருக்கும் வாக்யங்களே ப்ரமாணங்களென்றும், விதிஸம்பந்தமில்லாத உபநிஷத் வாக்யங்கள் அப்ரமாண மென்றும் மீமாம்ஸகர்கள் அபிப்ராயம். ஆனதுபற்றி, ப்ரஹ்மமும் அதன் ஸ்வரூபாதிகளும் உபநிஷத் வாக்யங்களினால் அறியப்பட்டாலும், அவை ப்ராமாணிகமென்று சொல்லமுடியாது என்பது பூர்வபக்ஷம்.

மேலும், 'மோக்ஷம் விரும்புவோன் ப்ரஹ்மத்தை அறியவேண்டும்' என்கிற விதி ஸ்ருதிகளி லிருப்பதால், அந்த விதியுடன் ஸம்பந்தப்பட்டவைகளாக ஏன் ப்ரஹ்மவிஷயமான வாக்யங்களைச் சொல்லக்கூடாது? என்றால், அந்த விதி 'த்ருஷ்டிவிதி' யாயிருக்கலாம். உத்கீதத்தையும், மநஸ்ஸையும், ப்ராணனையும் ப்ரஹ்மமாய் எண்ணும்படி சொல்லும் விதிகள் த்ருஷ்டிவிதிகள்.

இந்த உபாஸநங்கள் ப்ரஹ்மமல்லாதவற்றை ப்ரஹ்மமாய் எண்ணச் சொல்வது போல, ப்ரஹ்மவிஷயமான விதிகளும் பொய்யான ப்ரஹ்மத்தை உண்மையாய் இருப்பதுபோலச் சொல்வது கூடும். இதனால், ப்ரஹ்மம் தத்யம் என்றும், வேதாந்தத்தினால் ப்ரஹ்மம் தத்யமாய் அறியப்படும் என்றும் சொல்வது கூடாது என்பதும் பூர்வபக்ஷியின் அபிப்ராயம்.

இதற்கு ஸமாதாநம் ஸூத்ரம். உபநிஷத்துக்க ளல்லாத கர்மகாண்டத்தில் அர்த்தவாதங்களுக்குத் தனது அர்த்தத்தில் ப்ராமாண்யமில்லை என்பது வாஸ்தவமாயிருந்தாலும், உபநிஷத்துக்களில் ப்ரஹ்ம ஸ்வரூப பரமானவும் அதன் குண பரமானவுமுள்ள வாக்யங்களெல்லாம் அதன் அர்த்தத்தில் ப்ரமாணங்களே. ப்ரஹ்மம் "அநவதிகாதிஶயாநந்தஸ்வரூபம்" அதாவது - அளவற்ற ஆநந்த ஸ்வபாவமுள்ளது. இது "ஆநந்தோ ப்ரஹ்ம" "யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்" "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" முதலான ஶ்ருதி வாக்யங்களால் தெரிகிறது. இப்படிப்பட்ட ஆநந்தம் ப்ரஹ்மப்ராப்தியில் கிடைப்பதால் அதுவே பரமபுருஷார்த்தம். இந்தப் புருஷார்த்தத்தைப் போதிக்கும் வாக்யங்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான கார்யங்களைப் போதிக்காததால் ப்ரமாணமில்லை என்று சொல்வது ஸரியன்று. பரமபுருஷார்த்தமாகிய ப்ரஹ்மத்தை அறிவிக்கும் வேதாந்தவாக்யங்கள் நன்றாய்ப் புருஷார்த்தாந்வயம் உள்ளவைகளே. ஆகையால், "யதோ வா இமாநி" (தை. ப்ருகு. க.) "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" (ஹா. சு. உ, 3) முதலான வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் விஷயத்தில் ப்ரமாணமானவைகளே.

ப்ரஹ்மவிஷயமான வாக்யங்களை விதிஶேஷமாயும் சொல்லலாம். அதாவது - "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்," "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" முதலான வாக்யங்கள் ப்ரஹ்மத்தை அறியவேண்டும் என்று

விதிக்கின்றன. அப்படிப்பட்ட விதிகளுக்கு ஶேஷமாய், ப்ரஹ்ம மென்பது என்னவென்பதை "யதோ வா இமாநி" முதலான வாக்யங்கள் நிரூபிக்கின்றன. ஆகையால், இந்த வாக்யங்கள் விதி ஸாபேக்ஷமென்கிற பக்ஷத்திலும் இவைகளுக்கு விதிஸம்பந்த மிருப்பதால், இவைகள் ப்ரமாணங்களே.

மேலும், விதிஶேஷமாயும் ப்ரீதி ஜநகமாயுமுள்ள வாக்யங் களெல்லாம் பொய்யான அர்த்தங்களைச் சொல்லலா மென்பது ஸரியன்று. விதிஶேஷமான வாக்யங்களின் ப்ரதீதமான அர்த் தத்துக்கு விரோதமில்லாவிட்டால் அவைகளுக்கு ப்ராமாண்யம் ஒத்துக்கொள்ள வேண்டும். அர்த்தவாதங்களுக்குத் தன் அர்த்தங் களில் ப்ராமாண்யமில்லை என்பதை வேதாந்திகள் ஒத்துக்கொ ள்ளவில்லை. ப்ரத்யக்ஷாதி பாதமில்லாத அர்த்தங்கள் ப்ரமாணங் கள்தான். அப்படியே 'உன் பிதா ஸௌக்யமா யிருக்கிறார்' இத் யாதியான வாக்யங்கள் பொய்யாயிருந்தாலும் ப்ரீதியை உண்டு பண்ணுமென்பதும் ஸரியன்று; உண்மையென் றறிந்தாலொழிய இந்த வாக்யங்களால் ப்ரீதி உண்டாகாது.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்ப்ரதாயத்திலே ப்ரஹ்ம விஷயமான ப்ரமாண வாக்யங்கள் ஸ்வதஃ ப்ரமாணங்கள் என்பதே முக்ய பக்ஷம். விதிஶேஷமாயும் அவைகள் ப்ரமாணமென்பது மத்யம பக்ஷம். சிலர் ப்ரஹ்மத்தை, 'ப்ரபஞ்சம் பொய் என்று அறி' என்கிற நிஷ்ப்ரபஞ்சீகரண விதிக்கு ஶேஷமென்றும், சிலர் த்யாந விதிக்கு ஶேஷமென்றும், சிலர் ப்ரஹ்மம் ஒன்றாகையால் மற்றது பொய் யென்றறிய மஹாவாக்யமே போதுமாகையால் த்யாந விதி அவஶ்யமில்லை யென்றும் வேதாந்த வாக்யம் ஸ்வதந்த்ர மாய் ப்ரமாணமென்றும் பல விதமாய்ச் சொல்லுகிறார்கள். இவர் கள் அபிப்ராயங்களும் அவைகளின் கண்டநங்களும் ஸ்ரீ பாஷ்யத் தில் விஸ்தாரமாய் அறியப்படவேண்டும்.

இந்த முதல் நான்கு அதிகரணங்களும், வேதாந்த ஶாஸ்த் ரத்துக்கு உபோத்காத ரூபமாய், ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்

டியதென்பதை ஆக்ஷேப நிவ்ருத்தி பூர்வகமாக ஸ்தாபித்தன. “𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌶𑌕𑍍𑌯𑌤𑌾𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑌾 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨 𑌫𑌲𑌤𑍍𑌵𑌂 । 𑌏𑌤𑌾𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌸𑍂𑌤𑍍𑌰𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇𑌨𑌾 𑌨𑌾𑌶𑌂𑌸𑌿𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌿” என்கிற ஸ்லோகம் இந்த நான்கு ஆக்ஷேபங்களையும் ஸங்க்ரஹிக்கின்றது. அதாவது - ஸித்த வஸ்துவை ஶப்தம் போதிக்காதென்றும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷண மில்லையென்றும், அநுமாநத்தினல் அதை அறியலாமென்றும், அதை அறிவதால் ப்ரயோஜநமில்லை யென்றும் ஆகிய இந்த ஆக்ஷேபங்கள் க்ரமமாய் நான்கு ஸூத்ரங்களிலும் நிராகரிக்கப் பட்டன. ஆகையால், வேதாந்த ஶாஸ்த்ரம் ஆரம்பிக்கலாம் என்பது, இந்த ‘𑌸𑌤𑍁𑌃𑌸𑍂𑌤𑍍𑌰𑍀’ ஆகிய முதல் பாகத்திற்குத் தாத்பர்யம். அர்த்தாத், ப்ரஹ்மம் ஜகத்துக்கு உபயவித காரணம் என்றும், அதற்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணமென்றும், ப்ரஹ்மம் மிகுந்த ஆநந்த ஸ்வரூபமாகையால் அதுவே பரம புருஷார்த்த மென்றும் சொல்லப்பட்டது. இனி, இந்த அத்யாயத்தின் பின்வரும் ஸூத்ரங்கள், இந்த ஜக்த்காரணமான ப்ரஹ்மத்தையே எல்லா வேதாந்த வாக்யங்களும் போதிக்கின்றன வென்றும், ப்ரதாநத்தையாவது ஜீவனையாவது அப்படிப்பட்ட ஜகத்காரணமாய்ச் சொல்லவில்லை யென்றும் அறிவிக்கின்றன.

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸுகந்யோபாக்யாநம்.

“𑌨𑌗𑌰𑌸𑍍𑌥𑍋 𑌵𑌨𑌸𑍍𑌥𑍋 𑌵𑌾 𑌪𑌾𑌪𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌶𑍁𑌭𑌃 ।
𑌯𑌾𑌸𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾 𑌮𑌹𑍋𑌦𑌯𑌾𑌃 ॥

𑌦𑍁𑌃𑌶𑍀𑌲𑌃 𑌕𑌾𑌮𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌵𑌾 𑌧𑌨𑍈𑌰𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌪𑌤𑌿𑌃 ॥”

என்று அத்ரி பத்நியாகிற அநஸூயை, ஸீதா பிராட்டிக்குப் பாதிவ்ரத்ய தர்மத்தை உபதேஶம் செய்திருக்கிறாள். ‘ராஜபோகங்களை அநுபவித்துக்கொண்டு நகர மத்யத்தில் வஸித்தாலும் பல வித க்லேஶத்துக்கு ஹேதுவான அரண்ய மத்யத்தில் வஸித்தாலும், துராசாரனாக இருந்தாலும் ஸதாசாரனாக இருந்தாலும் ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவே பரம ப்ரீதிக்குப் பாத்ரமாகும் பந்து; பர்த்தா என்கிற காரணத்தினால் மாத்ரம் இவ்விதமாக அவனிடம் ப்ரீதி செய்யும் பதிவ்ரதோத்தமைகளுக்கு ஸகல ஶ்ரேயஸ்ஸும் உண்டாகின்றது. உத்தம குணமுடைய ஸ்த்ரீகள், பர்த்தாவினிடத்தில், அவன் தநிகனாக இருக்கிறான் என்று அதிக ப்ரீதியையாவது நிர்தநனாக இருக்கிறான் என்று குறைந்த ப்ரீதியையாவது செய்யமாட்டார்கள். எந்தத் தஶையிலும் அவர்களுக்குப் பர்த்தாவே பரமமான தைவதம்’ என்று இவ்வாறு அநஸூயைசெய்த உபதேஶத்தை அநேக புராணகதைகள் நமக்கு நன்றாக வற்புறுத்துகின்றன. அவைகளுள் அந்யதமமாக இருக்கும் ஸுகந்யோபாக்யாநம் என்னும் சரித்ரத்தை இவ்விடத்தில் நாம் எழுதுகிறோம்.

விந்த்ய பர்வதத்துக்கு அடுத்த நர்மதை நதத்திற்கு ஸமீபத்தில், ப்ருகு மஹர்ஷியின் புத்ரராகிய ச்யவநருடைய ஆஶ்ரமம்

ஒன்று உண்டு. ஒரு ஸமயத்தில் அந்த ச்யவநர் மஹத்தான தபஸ் செய்பவராய்ப் பஹுகாலம் ஸமாதியில் இருந்தார். அப்பொழுது அவ்வாறு யோகநிஷ்டையில் இருந்த அவர்மீது புற்று வளர்ந்து, கறையான்கள் வஸிக்கும்படியாகவும் ஸர்ப்பங்கள் அடையும்படியாகவும் பெரியதொரு மண்மேடாகக் கால க்ரமேண ஆகிவிட்டது. இப்படி இவர் தீர்க்க ஸமாதியில் இருந்துகொண்டு வருகையில், ஶர்யாதி என்னும் ஒரு மஹாராஜன் தனது பரிவாரங்களுடனும் ஸமஸ்த அந்தஃபுரத்துடனும், அந்த ஆஶ்ரமத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸரஸ்ஸின் ரமணீயதையைப் பார்த்து அவ்விடத்தில் விஹரிக்கவேணு மென்னும் எண்ணம் கொண்டவனாய் அவ்விடத்திற்கு வந்தான். அந்த மஹாராஜனுக்கு ஸுகந்யை என்னும் பெயருடைய ஓரே ஸ்த்ரீ ப்ரஜை உண்டு. அவள் தனது தோழிமாருடன் அந்த வநத்தின் அழகைப் பார்த்து ஆநந்த மடைந்தவளாய் ஒரு ஸ்தலத்திலிருந்து மற்றொரு ஸ்தலத்திற்குப் போகிற போது, யத்ருச்சையாக ச்யவநர் ஸமாதி யிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள். ஸர்வாபரண பூஷிதையாகவும், இயற்கையாகவே அதிமதுரமான ஆக்ருதியை உடையவளாகவும் இருந்த அந்த ஸுகந்யை ஸமீபத்தில் வரவே, ஏதோ காரணத்தால் ஸமாதியிலிருந்து விழித்துக்கொண்டவராய், ச்யவநர், புற்றுக்குள் இருந்தபடியே, ஸகிகளை விட்டு அப்பொழுது கொஞ்சம் விலகியிருந்த ஸுகந்யையைப் பார்த்து, 'ஹே ஸுப்ரு! நீ,யார்? விஜநமான இந்த வநத்தில் நீ வருவதற்குக் காரண மென்ன? உன்னுடைய அழகையும் தேஜஸ்ஸையும் பார்க்கும்பொழுது உன்னோடு கூடவே எப்பொழுதும் வஸிக்கவேண்டுமென்று ஒரு ஆசை என் மநஸ்ஸில் ஜநிக்கிறது' என்று பல பேச்சுக்களைப் பேசியும், இவர் பசியினால் க்ஷாமமான கண்டத்தை உடைத்தாயிருந்தபடியால், அந்தப் பேச்சுக்களில் ஒரு அக்ஷரமும் ஸுகந்யையின் காதுக்கு எட்டவேயில்லை. அவர்வார்த்தை யொன்றையும் அறியாமலிருந்த அந்த ஸுகந்யை யத்ருச்சையாக அந்தப் புற்றண்டைவந்து அதற்குள் ப்ரகாஶித்துக்கொண்டிருந்த ச்யவநருடைய கண்களைப் பார்த்து, 'அஹோ! இந்தப் புற்றுக்குள் ஏதோ ஒரு ப்ரகாஶமுள்ள ஜ்யோதிஸ் தெரிகின்றதே! இது எதுவாக இருக்கக்கூடும்?' என்கிற பால்ய ப்ரயுக்தமான சாபல்யத்தால் அருகிலிருந்த ஒரு முள்ளை எடுத்து அந்த ஜ்யோதிஸ்ஸைக்

குத்தினுள். அதனுல் உபத்ரவம் அடைந்தவராய் ச்யவநர் கோபங் கொண்டு மஹாராஜனை ஶபிக்க, மஹாராஜனுடைய ஸமஸ்த பரிவாரத்திற்கும் தேஹத்தில் ஒரு நிரோதம் உண்டாகி எல்லாரையும் அதிமாத்ரம் உபத்ரவித்தது. இதைப் பார்த்து மஹாராஜன், 'நம்மவருள் யாரோ பார்க்கவ மஹர்ஷிக்கு அதிக்ரமத்தைச் செய்துவிட்டார்' என்று ஊஹித்து, ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கேட்டும் எல்லாரும் 'நாம் ஒன்றையும் அறியோம்' என்று சொல்லிவிடவே, கடைசியாக ஸுகந்யை, ஜ்யோதிஸ்ஸையுடைய ஒரு ஸத்வத்தைத் தான் ஒரு புற்றுக்குள் கண்டதாகவும், தான் அதை இன்னது என்று அறியாததால் ஒரு முள்ளினுல் குத்தினதாகவும் சொன்னுள். அதுகேட்ட ஶர்யாதி, உடனே அந்தப் புற்று இருக்கும் இடம் போய் அதற்குள் தபஸ் செய்து கொண்டிருந்த ச்யவநரைக் கண்டு, 'ஹே ஸ்வாமிந்! எனது புத்ரியால் அஜ்ஞாநத்தால் செய்யப்பட்ட இந்த அதிக்ரமத்தை க்ஷமிக்கவேணும்' என்று ப்ரார்த்திக்க, உடனே ச்யவநர், 'மஹாராஜனே! நல்லது; அந்த ஸுகந்யையை எனக்குப் பத்நியாக விவாஹம் செய்துகொடுத்தால் அவளாற் செய்யப்பட்ட அபராதம் க்ஷாந்தமாகும்' என்று சொன்னுர். 'அதி வ்ருத்தராகவும் பஹு காலமாகத் தபஸ்ஸில் இருந்தபடியால் எலும்புகளெல்லாம் தெரியக்கூடுமளவு க்ருஶராகவும் இருக்கும் இந்தத் தபஸ்விக்கு நாம் எப்படி நமது அருமையான ஸுகந்யையைக் கொடுக்க ஸஹிப்போம்?' என்று கொஞ்சம் கலங்கி நின்ற தனது பிதாவைப் பார்த்து, ஸுகந்யை, 'ஹே தாத! இந்தக் கலக்கம் வேண்டாம். என்னுடைய அபராதத்தால் அநேக கோடி கணக்கான ப்ரஜைகள் வருந்துவது என்னை அதிமாத்ரம் பீடிக்கின்றது. அதற்கு நிஷ்க்ருதியாக நான் என்னுடைய போகங்கள் எல்லாவற்றையும் இழக்க ஸித்தமாக இருக்கிறேன். கொஞ்சமேனும் ஆலோசியாமல் இந்த மஹர்ஷியின் மநோரதத்தை நிறைவேற்றிவிடவேண்டும்' என்று மநஃபூர்வமாக ப்ரார்த்தித்தாள். மஹாராஜனும் அதை யுக்தமென்று க்ரஹித்து, புற்றை வெட்டி ச்யவநரை அதிலிருந்து வெளிப்படுத்தி, அவருக்கு மங்கள ஸ்நாநாதிகளைச் செய்வித்து யதோக்தமாகத் தனது கந்யையை அவருக்கு விவாஹம் செய்து கொடுத்தான். ச்யவநர், மிக்க ஸந்தோஷத்தை யடைந்தவராய் ப்ரஸந்நராகவே, அவர் இட்ட ஶாபம் நிவ்ருத்தியாகிவிட்டது.

அரசன், ஸுகந்யையைத் தனது பர்த்ரு ஸமீபத்தில் விட்டுவிட்டுப் பரிவாரத்துடன் தனது ஸ்தாநம்போய்ச் சேர்ந்தான். தநம் ரூபம் யௌவநம் ஒன்றுமில்லாத இந்தப் பதியை அடைந்த ஸுகந்யை அந்தக் காரணத்தால் யாதொரு ஔத்கண்ட்யத்தையும் அடையாமல், பக்தியுடனும் நியமத்துடனும் ச்யவநருக்கு ஶுஶ்ரூஷை செய்துகொண்டே பஹு காலம் அந்த வநத்திலேயே மநஸ்ஸில் யாதொரு வ்யஸநத்தையு மின்றிக்கே வர்த்தித்து வந்தாள். இவளது பதிவ்ரதா தர்மமும், மற்றை நற்குணங்களும், ஜகத் முழுவதும் பரவி, "ஸுகந்யா வ்ருத்தம் யயா" என்று எல்லாரும் அவளை ஒரு நிதர்ஶநமாக எடுக்கும்படி அவ்வளவு ப்ரஸித்தங்களாயின.

"கஸ்யைகாந்தம் ஸுகமுபநதம் து:கமேகாந்ததோ வா
நீசைர்கச்சத்யுபரி ச தஶா சக்ரநேமிக்ரமேண"

என்றன்றோ மநுஷ்யர்களுடைய தஶையின் பரிவ்ருத்தி சொல்லப்பட்டிருக்கிறது? இந்த லோகத்தில் ஏகாந்தமான ஸுகமாவது துக்கமாவது ஒருவனுக்கும் கிடையாது. சக்ரம் சுழல்வதுபோல மநுஷ்யர்களுடைய தஶையும் எப்பொழுதும் சுழன்றுகொண்டு வருகிறதே தவிர; 'ஒருவன் ஸுகத்தையே எப்பொழுதும் அநுபவிக்கிறான், மற்றொருவன் எப்பொழுதும் துக்கத்தையே அநுபவிக்கிறான்' என்பது இல்லை. இந்த ஸுகந்யைக்கும் ஶ்ரேயஸ் அடையும் காலம் ஒரு ஸமயத்தில் நேர்ந்தது. ஒருகால், தேவலோகத்திலிருந்து அஶ்விகள் என்று சொல்லப்படும் இரண்டு தேவதைகள் இந்த வநத்தின் மார்க்கமாகச் செல்லும்படி ஸம்பவித்தது. அவர்கள் இந்த ஆஶ்ரமத்தின் ஸமீபமாகப் போகும்பொழுது, தேவராஜனுடைய பெண்போல அதிஸுந்தரமான அங்கத்தை யுடைய ஸுகந்யையைப் பார்த்துக் காம வஶ்யர்களாய் அவளை அடையக் கருதி, 'ஹே ஸுந்தரி! நீ யாருடைய பார்யை? இங்கே என்ன செய்கிறாய்?' என்று கேட்க, அவள், தான் பிறந்த இடத்தையும் புகுந்த இடத்தையும் நிர்பயமாகவும் மிக்க த்ருப்தியுடனும் சொன்னாள். அஶ்விகள், அது கேட்டு, 'ஐயோ! உன்னுடைய பிதாவின் க்ரௌர்யத்தைப் பற்றி நாம் என்ன சொல்வோம்? அநர்க்கமான போகத்திற்குத் தகுந்த உன்னுடைய இந்த ஶரீரத்தை, என்ன தைர்யத்துடன் ஸர்வ ப்ரகா

ரத்திலும் அநர்ஹனுகவும் அஶக்தனுகவும் இருக்கும் இந்தத் தபஸ்விக்குக் கொடுக்கத் துணிந்தார்? இப்பொழுதும் தப்பில்லே. காம போகங்களுக்கெல்லாம் பஹிஷ்க்ருதனுன இவனே த்யஜித்து விட்டு எங்களுள் ஒருவரைப் பதியாக வரித்துக்கொள். நாங்கள் தேவ வைத்யர்கள். உனது யௌவநத்தை வீணுக்கவேண்டாம்' என்று ஸுகந்யையைப் பார்த்துச் சொல்ல, ஸுகந்யை மிக்க வருத்தத்துடன், 'தேவதைகளாயுள்ள உங்களுக்கு நீங்கள்பேசும் பேச்சுக் கொஞ்சமேனும் த்குந்தது அன்று. பதிவ்ரதா தர்மத்தைக் கைக்கொண்டிருக்கும் என்னே வேறுவிதமாக ஸங்கிப்பதையும் நீங்கள் அஸப்யமான பேச்சுப் பேசுவதையும் பார்க்க எனக்கு லஜ்ஜையாக இருக்கிறது' என்று திக்கரித்தாள். காமம் உன்மஸ்தகமாக ஏறி யிருந்தபடியால் இந்தத் திக்காரத்தைக் கவனியாமலே, ஏதாவது ஒரு உபாயத்தால் இவளே ஸ்வாதீநம் செய்துகொள்ள வேணுமென்று எண்ணிய அந்தத் தேவதைகள் ஸுகந்யையைப் பலவிதமாகப் பயமுறுத்தி, கடைசியில் பின் வருமாறு ஒரு உபாயத்தைச் சொன்னுர்கள். 'ஸுகந்யே! உன்னுடைய பதியோ இப்பொழுது ஜரையால் விக்ருதனுக இருக்கிருன். அவனே நல்ல யுவாவாகவும் எங்களேப் போன்ற ரூபமுள்ளவனுகவும் நாங்கள் செய்துவிடுகிறேும். பிறகு எங்கள் மூன்று பெயரில் நீ யாராவது ஒருவரைப் பதியாக வரித்துக்கொள்' என்பதே. தன்னுடைய பாதிவ்ரத்யத்தில் த்ருடமான நம்பிக்கையுள்ள ஸுகந்யை, அதுகேட்டு, 'இப்படிச் செய்வதால் நமக்கு யாதொரு ஹாநியு மில்லே; ஒருபொழுதும் நம்முடைய மநஸ் நம்மை மோசம் செய்யாது. ஆனுலும், பர்த்தாவின் அநுமதியைக் கேட்டு இதற்கு மறுமொழி கூறுவோம்' என்று எண்ணிப் பதியினிடம்போய் அந்தத் தேவதைகளின் நிர்ப்பந்தத்தையும், தனது திக்காரத்தையும், அவர்கள் கடைசியாகச்சொன்ன ஸமயத்தையும் எல்லாவற்றையும் சொன்னுள். யௌவநத்தைப் பெறுவதில் மிக்க உத்ஸுகராயிருந்த அந்த வ்ருத்தர், 'அப்படியே செய்' என்று சொல்லவே, உடனே அஶ்விதேவதைகள் அந்த வ்ருத்தரை அங்குள்ள தொரு ஸரஸ்ஸில் ப்ரவேஶிக்கச் செய்து தாங்களும் அதில் ப்ரவேஶித்தார்கள். ஸரஸ்ஸிலிருந்து உத்தீர்ணர்களாகத் திரும்பி வருகையில், மூன்றுபெயரும் மநஸ்ஸுக்கு ப்ரீதியைக் கொடுக்கக்கூடிய திவ்யமான ஒரே ரூபத்தை உடையவர்களாக

வந்து ஸுகந்யையின் எதிரில் நின்று, 'எங்களுள் யாரையாவது ஒருவனைப் பதியாக வரித்துக்கொள்' என்று சொல்ல, ஸுகந்யை, அதுகண்டு கொஞ்சம் மயங்கி, பிறகு தனது அந்தஃகரண ப்ரவ்ருத்தியை விசாரித்து அவர்களுள் ஒருவனை வரித்தாள். "ஸதாம் ஹி ஸந்தேஹபதேஷு வஸ்துஷு ப்ரமாணமந்த:கரணப்ரவ்ருத்தய:" என்கிறபடி அவளுடைய அந்தஃகரணம் அவள்து பதியையே வரிக்கும்படியாகச் செய்தது. ஸுகந்யையின் மனவுறுதியைக் கண்ட அச்விதேவதைகள் மிக்க வியப்படைந்தவர்களாய் அவளுடைய பாதி வ்ரத்யத்தைப் பலவாறாக ச்லாகித்தார்கள். ச்யவநரும் தமக்குத் திவ்ய யௌவநம் உண்டானதற்கு இந்தத் தேவதைகளே காரணம் என்று உணர்ந்து, அதற்கு ப்ரத்யுபகாரமாக 'உங்களுக்கு யாகங்களில் ஸோமபாநத்தில் பாகம் இருக்கட்டும்' என்று அநுக்ரஹித்தார். ஸுகந்யையை அநுக்ரஹிக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் வந்த அந்தத் தேவதைகளும் ச்யவநருடைய அநுக்ரஹத்தால் ஸந்துஷ்டர்களாய்த் தங்கள் ஸ்தலத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். சர்யாதி மஹாராஜனும் தனது புத்ரிக்கு நேர்ந்த பாக்யத்தைக் கேட்டு அதி நிர்வ்ருதனாய், தனது பார்யையுடன் ஜாமாதாவின் ஆச்ரமத்துக்கு வந்து தம்பதிகளை நேரில்பார்த்து ஆநந்தமடைந்து பிறகு தனது ராஜ்யம் போய்ச் சேர்ந்தான். ரிஷியும் ரிஷிபத்நியும் பஹுகாலம் அங்கிருந்தே அமாநுஷங்களான போகங்களை அநுபவித்துவிட்டுப் பிறகு தமது தபோபலத்தால் பகவத் கடாக்ஷத்தையும் பெற்று ப்ரஜைகளுக்கு ஆத்யந்திகமான ச்ரேயஸ் எதுவோ அதையும் அடைந்தார்கள். இதுவன்றோ பாதிவ்ரத்யம்?

ஒரு பௌராணிகர்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌕𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃? 𑌪𑌰𑌮𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌕𑌃?
𑌕𑌃 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌨𑌯𑌨𑌃? 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 𑌕𑌃? ।
𑌕𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌤𑌾𑌯𑍁𑌤𑌶𑌤𑍈𑌕𑌕𑌲𑌾𑌂𑌶𑌕𑌾𑌂𑌶𑍇
𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰 𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍍? ॥ 12.

---

12. கீழ் ஶ்லோகத்தில், 'வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்டவர்களெல்லாரும், நாராயணனிடத்தில் அநந்யாதீநமும் அளவற்ற உத்கர்ஷத்தை உடைத்தாயிருப்பதுமான ஈஶித்ருத்வம் இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லி, அதற்கு ஹேதுவாக 'ப்ரஹ்மா ஶிவன் இந்த்ரன் முக்தர்கள் எல்லாரும் நாராயணனுடைய விபூதியின் ஒரு லேஶமன்றோ?' என்று விவரிக்கப்பட்டது. இந்த ஶ்லோகத்தில், 'ப்ரஹ்மா முதலியவர்களை நாராயணனுடைய விபூதியில் அந்தர்பூதர்கள் என்று எப்படி சொல்லலாம்? அநேக ஶ்ருதிவாக்யங்களில் இவர்களுக்கும் பரத்வம் சொல்லப்பட்டிருக்கிறதே!' என்கிற ஒரு ஆக்ஷேபம் ஶங்கிக்கப்பட்டு, 'அந்த வாக்யங்களுக்கெல்லாம் மஹாபுருஷனாகிற நாராயணனே விஷயம்' என்பதை லக்ஷ்மீபதித்வம் முதலிய லிங்கங்கள் த்ருடீகரிக்கின்றன என்று சொல்லப்படுகின்றது.

(𑌅𑌨𑍍𑌵𑌯𑌃) 𑌕𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃? 𑌕𑌃 𑌪𑌰𑌮𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌃? 𑌕𑌃 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌨𑌯𑌨𑌃? 𑌕𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃? (𑌅𑌨𑍍𑌵𑌯𑌸𑍍𑌯)

கஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே (இதம்) விஶ்வம் விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம்? [ஹே நாராயண! தேவரீரைத் தவிர யார் ஸ்ரீக்கும் ஸ்ரீ? தேவரீரைத் தவிர யார் பரமமான ஸத்வத்திற்கு ஸரியான ப்ரவர்த்தகன்? தேவரீரைத் தவிர யார் புண்டரீகாக்ஷன்? தேவரீரைத் தவிர யார் புருஷோத்தமன்? விசித்ரமான சேதநாசேதந விபாகங்கள் அடங்கிய இந்த ஸமஸ்த கார்ய ஸமூஹமும் தேவரீரைத் தவிர மற்றை யாருடைய ஸ்வரூப வைபவ லேஶத்தில் நிஷ்பந்நமாக இருக்கின்றது என்று சொல்லக்கூடும்?] 'ஶ்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் எவனொருவன் ஸ்வதஸ்ஸித்தமான ஐஶ்வர்யத்தை உடையவனென்றும் ஸர்வஸ்மாத் பரனென்றும் சொல்லப்படுகிறானோ, அவன் நாராயணனே; மற்றை எவனுமன்று' என்பதை, புருஷஸூக்தம் முதலியவைகளிலுள்ள அநந்யதாஸித்தங்களும் ஸுப்ரஸித்தங்களுமான லக்ஷ்மீபதித்வம் முதலிய லிங்கங்கள் போதிப்பிக்கின்றன. இந்த லிங்கங்களை ஸரியாக அறிபவர்கள் நாராயணனையே பரமமான தைவமாகக் கொள்வார்கள்' என்பது தாத்பர்யம்.

பரமமான ஐஶ்வர்யத்தைச் சொல்லும் ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்கள் எவை? நாராயணனைத் தவிர மற்றவர்கள் இந்த வாக்யங்களுக்கு விஷயமாகிறார்கள் என்று ஶங்கிக்க என்னஹேதுக்கள் இருக்கின்றன? கீழ்க் குறிக்கப்பட்ட அநந்யதா ஸித்தங்களான லிங்கங்கள் எவை? அந்த லிங்கங்களைக் கொண்டு நாராயணனே ஸர்வஸ்மாத் பரன் என்று எப்படி நிர்ணயிக்கக் கூடும்? இத்யாதியான ஆகாங்க்ஷைகள் இவ்விடத்தில் க்ரமமாக உண்டானாலும், அவைகளின் ஸமாதாநம் பெரியதொரு ஸமுத்ரமாக இருக்கிறபடியால், இவ்விடத்தில் அதைப் பற்றி நாம் எழுதத் துணியவில்லை. ஸ்ரீ ஆளவந்தார், 'நாராயணனைத் தவிர மற்றை எவன் ஸ்ரீக்கும் ஸ்ரீ ஆவான்?' இத்யாதியான ப்ரஶ்நங்களைச் செய்வதனாலேயே, நாராயணனே அப்படிப்பட்டவன் என்பது அவருடைய நிர்ணயம் என்று மாத்ரம் நாம் அறியவேண்டும்.

கஃ ப்ரியஃ ஸ்ரீஃ - தேவரீரைத் தவிர மற்றை யார் ஸ்ரீக்கும் ஸ்ரீ? பிந்தி வரும் ஸ்லோகங்களில் சொல்லப்படும் 'த்வத³ந்யஃ' (தேவரீரைத் தவிர்த்து மற்றை எவர்) என்பதை இந்த ப்ரஸ்நம் ஒவ்வொன்றிலும் அநுஸந்தித்துக் கொள்ள வேணும். லோகத்தில், ஸ்ரீயே எல்லாருக்கும் விசேஷித்த ஒரு உத்கர்ஷத்தை உண்டுபண்ணுகிருள் என்பது ப்ரஸித்தம்; அப்படிப்பட்ட ஸ்ரீக்கும் ஓர் அதிசயத்தை இவன் கொடுக்கிருன் என்பது அர்த்தம். "திருவுக்குந் திருவாகிய செல்வா" என்பது பெரிய திருமொழி. லக்ஷ்மிக்கு நாராயணன் பதியாயிருப்பதால், "பதிர் நாரீணாம் பரமம் நாரீணாம் பூஷணம் பூஷணாத³பி" [ஸ்த்ரீகளுக்குப் பர்த்தாவே பரமமான பூஷணம்] என்கிற ந்யாயப்படி லக்ஷ்மிக்கு இவன் ஓர் உத்கர்ஷத்தைச் செய்கிருன் என்பது குறிப்பு. 'ஸ்ரீஃ' என்னும் பதத்திற்குப் பல விதமாக வ்யுத்பத்தி சொல்லப்பட்டிருக்கின்றது :—

"ஸ்ருணாதி நிகி²லாந் தோ³ஷாந் ஸ்ருணாதி ச கு³ணைர் ஜக³த் । ஸ்ரீயதே சாகி²லைர் நித்யம் ஸ்ரயதே ச பரம் பத³ம் ॥"

இவைகளில் முக்யமாக நாம் ஒன்றைக் கைக்கொள்ளலாம். 'யா ஸ்ரீயதே ஸா ஸ்ரீஃ' ஸகல சேதநாசேதநங்களாலும் தங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளின் நிஷ்பத்திக்காக, ஆஸ்ரயிக்கப்படுமவள் ஸ்ரீஃ; அப்படிப்பட்ட ஸ்ரீயாலும் அதே விதமாக ஆஸ்ரயிக்கத் தகுந்தவன் நாராயணன் என்று சொன்னதாயிற்று.

புருஷ ஸூக்தத்தில், "ப்ரஜாபதிஸ் சரதி க³ர்பே⁴ அந்தஃ" என்று சதுர்முகனை ஸூசிப்பிக்கக் கூடிய ப்ரஜாபதி ஸப்தம் ப்ரயுக்தமாக இருந்தாலும், "ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ" என்கிற லக்ஷ்மீ பதித்வ லிங்கம் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிற படியால், 'ப்ரஜாபதி' என்னும் ஸப்தத்துக்கு, லக்ஷ்மீ

பதித்வம் அந்வயிக்கக்கூடாத சதுர்முகன் என்னும் ரூடியான அர்த்தத்தை த்யஜித்து விட்டு, 'பதிம் விச்வஸ்ய' என்னுமிடத்தில் சொல்லியிருக்கிறபடி 'ஸமஸ்தகார்ய ஜாதத்திற்கும் பதி' என்னும் அர்த்தத்தைக் கைக்கொள்ள வேணும் என்று ஏற்படுகிறது. ஆகையால், 'புருஷ ஸூக்தத்திற்கு சதுர்முகன் விஷயம்' என்னும் சங்கை ஹரிதமாகி, லக்ஷ்மீ பதியாகிற நாராயணனே விஷயம் என்று ஸித்தம். அங்குச் சொல்லப்பட்டிருக்கும் ஸர்வஸ்மாத் பரத்வமும் அந்த நாராயணனுக்கே அந்வயிக்கும் என்பதை இந்த ப்ரச்நம் ஸூசிப்பிக்கிறது. இதே மாதிரி மற்றை ப்ரச்நங்களின் தாத்பர்யத்தை அறிந்துகொள்ளவேணும்.

கஃ பரமஸத்த்வஸமாச்ரயஃ? - எவன் பரமமான ஸத்வத்திற்கு ப்ரவர்த்தகன்? 'பரமம்' என்றால் 'மோக்ஷத்திற்கு உபயுக்தமான ப்ரகர்ஷத்தை உடைய.' 'ஸத்வம்' என்றால் 'ஆத்யந்திகமான ஸுகத்திற்கு ஹேதுவாகும் ஒரு குண விசேஷம்.' 'ஸமாச்ரயஃ' என்றால் 'நன்றாக ப்ரவர்த்திப்பிக்கிறவன்.' "ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம்" ... "ஸத்த்வம் நாராயணாத்மகம்" இத்யாதியான ப்ரமாணங்களால் நாராயணனுக்கே ஸத்வ ப்ரவர்த்தகத்வம் ஸித்தமாகின்றது. அன்றிக்கே, 'பரம ஸத்வம்' என்றால் 'சுத்த ஸத்வ மயமான அப்ராக்ருத த்ரவ்யம்' என்னும் அர்த்தத்தையும் கொள்ளலாம். பாஞ்சராத்ராதிகளில் ப்ரஸித்தமான திவ்ய மங்கள விக்ரஹ யோகம் நாராயணனுக்கே கூடுமாதலால், இந்த அர்த்தத்திலும் ஸத்வ ப்ரவர்த்தகத்வம் அவனுக்கே உபபந்நம்.

கஃ புண்டரீக நயனஃ - யார் புண்டரீகாக்ஷன்? - சாந்தோக்யத்தில், "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று புருஷோத்தமனாகிற நாராயணனுக்கே புண்டரீகாக்ஷத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ச்ருதிவாக்யத்தின் அர்த்தத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் செய்தருளியிருக்கும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் விசதமாகக் காணலாம். "கம்பீராம்பஸ்ஸமுத்பூத

सुमृष्टनाल रविकरविकसित पुण्डरीकदलामलायतेक्षणः" என்பது ஸ்வாமியின் வாக்யம். 'அகாதமான ஜலத்தில் உண்டாகி யிருப்பதாயும், செழிப்பான நாளத்தை உடையதாயும், ஸூர்ய கிரணத்தால் தானே மலர்ந்ததாயுமுள்ள புண்டரீக தளம்போல அமலமாய் நீண்ட திருக்கண்களை உடையவன்' என்று அர்த்தம். ஜலஸ்தமாயும் நாளஸ்தமாயும் ஸ்வயம் விகஸிதமாயுமுள்ள புஷ்பத்திற்கு ஶோபை அதிகமானதால், அந்த அர்த்தங்களைக் காண்பிக்கும் மூன்று விஶேஷணம் இந்த வாக்யத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று அர்த்தங்களும் ஶ்ருதி வாக்யத்தில் இருக்கும் 'கப்யாஸம்' என்னும் பதத்தால் ஏற்படுகின்றன. - (1) के जले आस्ते इति कप्यासम् - ஜலத்தில் இருக்கின்ற; (2) कं पिबतीति कपिः नालं, तस्मिन्नास्ते इति कप्यासम् - நாளத்திலே இருக்கும்; (3) कं पिबतीति कपिः सूर्यः, तेन सूर्येण क्षिप्यते विकास्यते इति कप्यासम् - ஸூர்யனால் விகஸிக்கப்பட்ட. இந்த அர்த்தங்களால் பரிபூர்ணத்வமும் அநுக்ரஹ ஶீலத்வமும் த்யோதிப்பிக்கப்படுகின்றன. விரூபமாக இல்லாமல் அரோஷணமாயுள்ள திருக்கண்கள் நாராயணனுக்கே சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அப்படிப்பட்ட திருக்கண்களை உடையவன் விஷயமாக அந்தச் சாந்தோக்ய ஶ்ருதி, "स एष सर्वेभ्यः पाप्मभ्य उदितः" என்று கர்ம வஶ்யதா கந்தமேயற்றிருக்கும் தன்மையைச் சொல்லுகிறபடியாலும், நாராயணனே அகர்ம வஶ்யன் ஸர்வஸ்மாத் பரன் என்பது ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம்.

कः पुरुषोत्तमः? - யார் புருஷோத்தமன்? 'புருஷோத்தமன்' என்னும் பதத்தால், பரமாத்மாவாகவும் ஸர்வத்தையும் வ்யாபித்தும் ஸர்வத்தையும் பரித்துக்கொண்டும் ஸர்வநியந்தாவாகவும் ஸர்வஸ்வாமியாகவும் இருக்கும் தன்மைகளை உடையவன் சொல்லப்படுகிறான். இந்த அர்த்தத்திற்குப் பின்வரும் கீதாவாக்யங்கள் ப்ரமாணங்களாகும்: —

“𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇 𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰 𑌏𑌵 𑌚 ।
𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌰𑌮𑌤𑍀𑌤𑍋𑌽𑌹𑌮𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑌪𑌿 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌅𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥”

[க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் இரண்டு புருஷர்கள் லோகத்தில் ப்ரஸித்தர்கள்; க்ஷரன் என்றால், ஸம்ஸரிக்கும் ஸ்வபாவமுள்ள அசித் ஸம்பந்தம் பெற்றிருக்கும் ஜீவன்கள்; அக்ஷரன் என்றால், அசித் ஸம்பந்தம் நிவ்ருத்தியாகி இயற்கையான ரூபத்துடன் அவஸ்திதரான முக்தர்கள். இப்படி பத்த முக்தர்களைக் காட்டிலும் வேறுபட்ட உத்தமனான புருஷன் ஒருவன் உண்டு. ஶ்ருதிகள் அவனைப் பரமாத்மாவென்று சொல்லுகின்றன; அவன் அசேதநம் பத்தசேதநன் முக்தசேதநன் இந்த மூன்றிலும் ஆத்மாவாக உட்புகுந்து வ்யய ஸ்வபாவ மின்றிக்கே ஸர்வத்தையும் நியமநம் செய்துகொண்டிருக்கிறான். இப்படி க்ஷரனான பத்தஜீவனைக்காட்டிலும் அதீதனாகவும், அக்ஷரனான முக்தனைக்காட்டிலும் உத்க்ருஷ்டதமனாகவும் நானே. ஆகையால், எனக்கு ஶ்ருதியிலும் ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமன் என்று ப்ரஸித்தி உண்டாகி இருக்கிறது.] இப்படிப்பட்ட பரமாத்மத்வம் முதலியவை நாரங்களை அயநமாக உடைய நாராயணனுக்கே உபபந்நங்களாதலால் நாராயணனே ஸர்வஸ்மாத் பரன் என்று சொன்னதாயிற்று.

**விஶ்வம்** - ஸமஸ்தமான கார்ய ஸமூஹமும்; அதாவது - ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்கள் ஸமஸ்தமும் என்று அர்த்தம்.

**அயுதாயுதஶதம்** - பதினாயிரம் பதினாயிரம் நூறு. இதனால் அபரிச்சிந்நமான மஹிமை சொல்லப்படுகின்றது. அதன் ஏககலா - ஒரு அம்ஶம். அதன் அம்ஶகம் - அல்பமான ஒரு பாகம்.

𑌵𑍇𑌦𑌾𑌪𑌹𑌾𑌰 𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌤𑌕 𑌦𑍈𑌤𑍍𑌯𑌪𑍀𑌡𑌾-
𑌦𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌚𑌨 𑌮𑌹𑌿𑌷𑍍𑌠 𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌃 ।
𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌶𑍁𑌪𑌤𑍀 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑌿 ? 𑌕𑌸𑍍𑌯
𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑍇𑌨 𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌧𑍃𑌤𑍇𑌨 ? ॥ **13.**

---

அதன் 𑌅𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 - ஒரு அவயவம். அபரிமிதமான பகவத் ஸ்வரூப வைபவத்தின் அதிமாத்ரம் அல்பமாகிய ஒரு பாகம் என்று கருத்து. அந்தப்பாகத்தில் இந்த ப்ரபஞ்சம் முழுவதும் நாநா விதமான விபாகங்களுடன் நிஷ்பந்நமாக நிற்கிறது என்றால், பகவானுடைய பூர்ண மஹிமை எவ்வளவு என்று யாரால் சொல்லக்கூடும்?

𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌵𑌿𑌧𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 - 𑌵𑌿𑌵𑌿𑌧𑍋 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌗 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 - சேதநாசேதநங்களுடைய விபாகங்களோ அதி விசித்ரமாக இருக்கின்றன; அப்படிப்பட்ட விபாகங்களெல்லாம் தங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தியாகிய எல்லாவற்றிற்கும் நாராயணனிடத்திலே அதீநங்களாக நிஷ்பந்நங்களாகி யிருக்கின்றன என்று அர்த்தம். அதாவது - ப்ரஹ்ம ருத்ராதிகள் முதல் ஸ்தம்ப பர்யந்தமான ஸகல கார்யஜாதமும் நாராயணனுடைய ஸ்வரூப ஏகதேஶத்திலேயே இருக்கின்றது.

"𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌤𑌾𑌯𑍁𑌤𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌪𑌰𑌮𑌾𑌣𑍁 [illegible]"

"𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌵 𑌦𑍇𑌵! 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 𑌭𑍂𑌤
𑌵𑌿𑌶𑍇𑌷 𑌸𑌙𑍍𑌘𑌾𑌨𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑌂 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂"

என்கிற வாக்யங்களால் நாராயணனே ஸர்வ வ்யாபியாக இருக்கிறான், ப்ரஹ்ம ருத்ராதிகளெல்லாம் அவனுடைய ஸ்வரூப ஏகதேஶத்தில் இருக்கிறார்கள் என்பது வ்யக்தமாகின்றது.

13. கீழ் ஶ்லோகத்தில், ப்ரத்யக்ஷங்களான வேத வாக்யங்களிலுள்ள லக்ஷ்மீபதித்வம் முதலிய ப்ரஸித்த லிங்கங்களாலும் ஸ்ம்ருதி வாக்யங்களின் பலத்தாலும் நாராயணனுக்கே பரத்வம்

உண்டு என்று சொல்லப்பட்டது; இந்த ச்லோகத்தில், இதிஹாஸ புராணங்களும் அப்படியே சொல்லுகின்றன என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஸாமாந்யமாக மற்றை எவருக்கும் பரத்வமில்லை யென்று கீழ்ச்லோகத்திற் சொல்லப்பட்டது; இப்பொழுது விஶேஷித்து ப்ரஹ்மா ருத்ரன் என்னும் இருவருக்கும் பரத்வமில்லையென்று சொல்லப்படுகிறது என்றும் சொல்லலாம்.

த்வத்த: க: வேதாபஹாரகுருபாதகதைத்யபீடாத்யாபத்விமோசநமஹிஷ்டபலப்ரதாநை: ப்ரஜாபஶுபதீ பரிபாதி? ஸ்வஶிரோத்ருதேந (த்வத்தஸ்ய) கஸ்ய பாதோதகேந ஸ ஶிவ:? [மது கைடபர்களாற் செய்யப்பட்ட வேதாபஹாரம், ப்ராஹ்மணோத்தமமாகிற பிதாவை வதம்செய்த பாதகம், தைத்யர்களால் உண்டான உபத்ரவங்கள் ஆகிய பெரிய ஆபத்துக்களிலிருந்து ப்ரஹ்மருத்ரர்களைத் தப்புவித்தும், உத்தமங்களான வரங்களை அவர்களுக்குக் கொடுத்தும் இவ்வாறு ப்ரஜாபதியென்கிற சதுர்முகன் பஶுபதியாகிற ருத்ரன் இரண்டு பெயரையும் தேவரீரைத் தவிர்த்து மற்றை எவர் ஸம்ரக்ஷிக்கிறார்? தேவரீரைத் தவிர்த்து மற்றை எவருடைய திருவடி தீர்த்தத்தைத் தனது ஶிரஸ்ஸால் க்ரஹித்துக்கொண்டு ருத்ரன் பரிஶுத்தனானன்?]

வேதாபஹார - வேதங்களுடைய அபஹாரம். 'ஆதிகாலத்தில் பகவான் மஹத் முதலிய ஸ்ருஷ்டி க்ரமப்படி சதுர்முகனை முதலில் ஸ்ருஷ்டித்து, ப்ரளய திரோஹிதங்களாயிருந்த வேதங்களை ஆவிஷ்கரித்து, அவைகளை அவனுக்குக் கொடுத்து அநுக்ரஹித்தான். அந்த வேதங்களைக் கண்ணுகைக்கொண்டு சதுர்முகன் விச்வ ஸ்ருஷ்டியைச் செய்ய ஆரம்பித்த பொழுது, பகவானிடத்தினின்று ரஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றிய மது கைடபன் இரண்டு அஸுரர்கள், அந்த வேதங்களை

அபஹரித்துக் கொண்டு சதுர்முகன் பார்த்திருக்கையிலேயே ஜலத்தால் பூர்ணமாயிருந்த மஹோததியில் ப்ரவேஶித்துப் பாதாள லோகத்திற்குப் போய்விட்டார்கள். வேதங்களைப் பறிகொடுத்துச் சதுர்முகன் தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தேருது திகைப்புக்கொண்டு பஹுகாலம் கதறி பிறகு சிறிது தெளிந்து பகவானை ஸ்தோத்ரம் செய்ய, ப்கவான் ஹயக்ரீவ ரூபியாக எழுந்தருளிப் பாதாளத்திற்குப் போய் மது கைடபர்களை ஸம்ஹரித்து வேதங்களைத் திரும்பவும் சதுர்முகனிடம் கொண்டுவந்து கொடுத்தான்' என்கிற புராணகதை இவ்விடத்தில் அநுஸந்திக்கத் தகுந்தது.

ஶுரூவாதக - குருவிஷயமான பாதகம், அல்லது குருவான பாதகம். 'ப்ராஹ்மணோத்தமனுகிய பிதாவை வதம்செய்த மஹாபாபம்' என்று அர்த்தம். 'ஒரு காலத்தில் சதுர்முகனுடைய புத்ரனுகிற ருத்ரன் அளவற்ற கோபபரவஶனுகி, தனது இடக்கைக் கட்டை விரலின் நகத்தால் பிதாவினுடைய ஶிரஸ் ஒன்றைக் கிள்ளிவிட்டான். பிதாவும், 'நீ கபாலியாகப் போகக் கடவாய்' என்று ருத்ரனை ஶபிக்க, அச்சாபத்தால் ருத்ரன் தனது கையில், ஒட்டிக்கொண்ட ப்ரஹ்ம கபாலத்துடனே அது முதல் பஹுகாலம் தீர்த்தாடநம் செய்துகொண்டு, பிறகு ஒரு ஸமயத்தில் ஹிமவத் பர்வதம்வந்து, நாராயணனைப் பார்த்து ஶாபநிவ்ருத்திக்காக ப்ரார்த்திக்க, பகவான் அவனுக்கு ஶாபநிவ்ருத்தியைச் செய்தான்' என்பது புராண கதை. "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும், நாயகனவனே கபாலநன் மோக்கத்துக் கண்டுகொண்மின்" என்பது திருவாய்மொழி.

தைதூவீஶா - அஸுரர்களிடமிருந்து உண்டான உபத்ரவம். முன் ஒருகாலத்தில் அந்தகாஸுரர்களுடன் ருத்ரனுக்கு யுத்தம் நேர்ந்தபொழுது, அந்தகர்களால் ஆகுலீக்ருதனுய் ருத்ரன் நாராயணனை ஶரணம் அடைய, நாராயணன் ஶுஷ்கரேவதியை ஸ்ருஷ்டித்து ஒரு க்ஷணத்திற்குள்ளாகவே அந்தகர்களு

டைய ரக்தத்தைப் பாநம் செய்வித்து விட்டான் என்பது புராண கதை. அன்றிக்கே, ருத்ரனால் வரம்பெற்ற வ்ருகாஸுரன் தனது ஸாமர்த்யத்தை அந்த ருத்ரனிடத்திலேயே பரீக்ஷித்துப் பார்க்க வேணுமென்று ஆரம்பித்தபோது, அந்த வ்ருகாஸுரனுடைய தௌராத்ம்யத்தைப் போக்கி நாராயணன் ருத்ரனுக்குப் பயநிவ்ருத்தியைச்செய்தான் என்கிற கதையும் இவ்விடத்தில் விவக்ஷிதம்.

𑌆𑌦𑌿 - இவை முதலிய. த்ரிபுரர்களை ஜயிக்க வேணுமென்கிற இச்சை முதலியவைகளால் உண்டான ஆபத்தும் இங்கே ஸங்க்ரஹிக்கப்படுகின்றது.

𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌃 - உத்தமங்களான வரதாநங்களால். "𑌯𑍁𑌗𑌕𑍋𑌟𑌿 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌪𑌦𑍍𑌮𑌭𑍂𑌃 । 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌧𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ॥" [கணக்கற்ற யுக கோடிகாலம் விஷ்ணுவை ஆராதித்து, சதுர்முகன் மறுபடியும் த்ரைலோக்யாதிபத்யத்தை அடைந்தான்] இத்யாதியான வர தாநங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. ருத்ரனுக்குப் பஶுபதித்வம் கிடைத்ததும் நாராயணனுடைய அநுக்ரஹத்தாலே தான். "𑌸𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑍍𑌵𑌰𑌂 𑌵𑍃𑌣𑍈 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑌸𑌾𑌨𑍀𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌃" [ஒரு காலத்தில் ருத்ரன், 'நான் பஶுபதியாக இருக்க விரும்புகிறேன்' என்று நாராயணனை ப்ரார்த்திக்க, நாராயணன் அப்படியே அநுக்ரஹித்தான்] என்று ஶ்ருதி சொல்லுகின்றது.

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌶𑍁𑌪𑌤𑍀 - சதுர்முகனென்கிற ப்ரஜாபதி ருத்ரனென்கிற பஶுபதி இவர்களை.

𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌧𑍃𑌤𑍇𑌨 𑌕𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑍇𑌨 𑌸 𑌶𑌿𑌵𑌃? யாருடைய திருவடி தீர்த்தத்தை ஶிரஸ்ஸால் க்ரஹித்து அவனுக்குப் பரிஶுத்தி ஏற்பட்டது? 'ஸ:' என்னும் பதத்தால் '𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌶𑍁𑌪𑌤𑍀' என்னும் பதத்திலுள்ள பஶுபதியை க்ர

ஹிக்கவேணும். கங்கை நாராயணனுடைய பாதாங்குஷ்டத்திலிரு ந்து ப்ரவஹிக்கிறது என்பதும், அவ்வாறு உத்பத்தியாகி ஆகா ஶத்திலிருந்து விழும் கங்கையை ருத்ரன் ஶிரஸ்ஸால் க்ரஹித்து லோகத்திற்குக் கொடுத்தான் என்பதும் ஸுப்ரஸித்தம். இந்தக் கங்கை ருத்ரனுக்குப் பரிஶுத்தியைச் செய்வது என்பதற்கு, "தத³ம்பு³ பரயா ப⁴க்த்யா ஈ²யாஶ ஶிரஸா ஹர: । பாவநாய ஜடாமத்⁴யே" [அந்தத் தீர்த்தத்தைப் பரமமான பக்தியுடன் ருத்ரன் தனது பரிஶுத்திக்காக ஜடா மத்யத்தில் தரித்துக்கொண்டான்] இத்யாதியான வாக்யங்கள் ப்ரமாணம். ஸ்ரீ பாகவதத்திலும் இந்த அர்த்தத்தை ஸ்ரீஶுகர் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்:—

" யச்சௌ²ச நி:ஸ்ருத ஸரித்ப்ரவரோத³கேந
தீர்தே²ந மூர்த்⁴ந்யதி⁴க்ருதேந ஶிவ: ஶிவோऽபூ⁴த் ॥"

[பகவானுடைய சரணாரவிந்தத்திலிருந்து ப்ரவஹிக்கும் கங்கையின் தீர்த்தத்தை ஶிரஸ்ஸால் க்ரஹித்துக்கொண்டு ஶிவன் ஶிவத்வத்தை (அதாவது - பரிஶுத்தியை) அடைந்தான்.]

இதைப் போன்ற மற்றை அநேக புராண கதைகள் நாராயணனுடைய பரத்வத்தைச் சொல்லுகின்றன. இவைகளைத் தான் நமது ஆசார்யர்கள் ஸாத்விக புராணங்களென்று பரிக்ரஹித்திருக்கிறார்கள்; ருத்ரனுக்கும் சதுர்முகனுக்கும் பாரம்யத்தைச் சொல்லும் புராண கதைகளை ராஜஸ தாமஸங்களென்று த்யஜித்து விட்டார்கள்.

எஸ். வாஸுதேவன்.

323

ஸ்ரீ:.

# வைதிக ஶாஸ்த்ரங்களின் அத்யாபநம்.

இந்த விஷயத்தைப்பற்றி, ப்ரொபெஸ்ஸர் காக்ஸ் என்னும் ஒருவர், 'மாடர்ன் ரிவ்யு' என்னும் இங்க்லிஷ் பத்ரிகையின் நாளது மாஸத்திய ஸஞ்சிகையில், ஓர் உபந்யாஸம் எழுதியிருக்கிறார். நமது பாடஶாலைகளில் ஈஶ்வரபக்தி விஷயமான பாடங்கள் நடத்தவேண்டுமா வேண்டாமா என்கிற சர்ச்சை பலவிடங்களில் இப்பொழுது நடக்கிறபடியால், வேண்டாம் என்று சொல்பவர்களின் அபிப்ராயத்தை ஜநங்களுக்கு விஶதமாக ப்ரசரிப்பிக்க வேணும் என்கிற எண்ணத்துடன் அந்த உபந்யாஸத்தை ஸங்க்ரஹித்து இவ்விடத்தில் எழுதுகிறோம்.

"வேதங்களும் அவைகளுக்கு உபப்ருஹ்மணங்களென்று சொல்லப்படும் புராணங்களும் என்ன உபதேஶங்களைச் செய்கின்றன என்பதை முதலில் விசாரிப்போம். க்ரைஸ்தவ மதவேதங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒரு கந்யகைக்கு ஶிஶு ஒன்று ஜநித்ததென்றும், மநுஷ்யனொருவன் ம்ருதி யடைந்து புதைக்கப்பட்ட பிறகு மறுபடியும் ஜீவனோடு எழுந்திருந்து வந்தானென்றும், இந்த மநுஷ்யன் பிறகு பூமியை விட்டு ஆகாஶத்தில் போய் அந்தர்தாநத்தை அடைந்தானென்றும், ஒரு ஸமயத்தில் ஒரு ஸ்த்ரீ லவணமாக மாறுதல் அடைந்தாளென்றும், ஆதிகாலத்தில் பெரியதொரு ப்ரளயம் உண்டாகிப் பூலோகம் முழுவதும் பரவிப் பர்வதங்களின் ஶிகரங்களும் அமிழ்ந்துபோகும்படி வ்யாபித்திருந்தது என்றும், இன்னும் இவை போன்ற கதைகளை அந்த மதம் உபதேஶிக்கின்றது என்று அறிகிறோம். ஜேஸூ க்ரிஸ்துவே இந்தக் கதைகளைச் சொல்லியிருக்கிறபடியால், அந்த மதத்தை அவலம்பிக்கும் ஒருவன் இவைகளை நம்பியே தீரவேணும். ஹிந்து மஹம்மதிய மதங்களிலும் இவை போன்ற கதைகள் ஏராளமாகவே இருக்கின்றன; அந்த மதஸ்தர்களால் அவைகள் விஶ்வஸிக்கப்பட்டும் இருக்கும்.

இம்மாதிரியான உபதேஶங்கள் பாலர்களுக்கு எந்த ப்ரகாரத்தில் அநுகூலமென்று தெரியவில்லை. ஒருகால் கால விஶேஷத்தில் சில அதிகாரிகளுக்கு இந்தக் கதைகள் அநுகூலங்களாக இருந்திருக்கக் கூடுமாயினும், இக்காலத்தில் இவை அநுகூலங்களா? என்பதை வஸ்து ஸ்திதி பராமர்ஶத்தைக் கொண்டே நிர்ணயிப்போம். இந்தியாவிலுள்ள வஸ்து ஸ்திதியைப் பரர்மர்ஶித்தால், வேதத்தை நம்பினவர்கள், தர்மாநுஷ்டாந விஷயத்தில், வேதத்தை நம்பாதவர்களை விட அதிக ஶ்ரத்தாளுக்களாகக் காணப்படவில்லை. ஒரு காலத்தில் நான் என்னுடைய சில ஸ்நேஹிதர்களுடன் லோகாபிராமமான பேச்சுக்களைப் பேசிவரும்பொழுது, எங்களுள் ஒருவர் ஒரு

இங்க்லீஷ்கார உத்யோகஸ்தரைப்பற்றி 'அவர் லஞ்ஜம் வாங்குகிறதாக நான் கேள்விப்படுகிறேன்' என்று சொல்லும்படி ஸம்பவித்தது. 'அது வாஸ்தவமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், அதற்குத் தகுந்த அளவு அவர் வைதிகராக இருந்தார்' என்று மற்றொருவர் மறுமொழி கூறினார். இது கொஞ்சம் அத்யுக்தியாக இருந்தாலும், வைதிகர்களுள் தர்ம பரர்கள் அதிதுர்லபம் என்பதே என்னுடைய அநுபவம். என்னுடைய அபிப்ராயமும், வைதிக கதைகளுடைய ஜ்ஞாநம் ஒருவன் தர்ம பரனாக இருப்பதற்கு ப்ரயோஜகமன்று என்பதே; ஸுதராம், லோக விஷயஜ்ஞாநம் அதிகரித்து சித்த ஸம்ஸ்காரம் அடைந்திருக்கும் ஜநங்கள் விஷயத்தில் அது அத்யந்தம் அப்ரயோஜகமே.

வேதங்கள் அபௌருஷேயங்களென்றும் ப்ரம விப்ரலம்பங்களுக்கு அவைகளில் அவகாசமில்லையென்றும் நினைப்பது பண்டைய காலத்திற்குத் தகுந்தது. குணதோஷ விவேசநம் செய்யும் சக்தியுள்ள இக்காலத்திய ஜநங்கள் விஷயத்தில் அந்த நினைவு அநுபபந்நம். குணதோஷ விவேகமும் பௌராணிக கதைகளில் விச்வாஸமும் ஸ்வபாவத்தில் வ்யதிகரணங்கள்; ஒருவனிடத்தில் இவை இரண்டும் சேர்ந்திருப்பது சேராச் சேர்த்தி. ஒரே பாடசாலையில் வ்யதிகரணங்களான இவை இரண்டையும் அப்யஸிப்பிக்க முயல்வது அத்யந்தம் பரிஹாஸாஸ்பதமாகும். ஒரு பாலனுக்கு, ஒரு பாடத்தில், 'இந்தப் பூமி அநேக காலமாகக் கொஞ்சம் கொஞ்சமாக வ்ருத்தியாகி வந்திருக்கின்றது' என்கிற ஆதுநிக சாஸ்த்ர நிர்ணயத்தையும், மற்றொரு பாடத்தில் 'ஈச்வரன் ஸங்கல்பித்தான், ஸங்கல்ப மாத்ரத்தாலே இந்தச் சராசரம் அடங்கிய ப்ரபஞ்சம் முழுவதும் ஆவிர்பவித்தது' என்கிற வைதிகக் கொள்கையையும் உபதேசிப்பது எவ்விதத்தில் உபபந்நமாகும்? இம்மாதிரியான உபதேசங்களெல்லாம் வ்யர்த்தமாகிவிடுமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஐரோப்பா தேசத்தில் மிகுந்த ஊக்கத்துடன் க்ரைஸ்தவ மதத்தைப் பாலர்களுக்கு உபதேசித்தே வருகிறார்கள்; அப்படியிருந்தும் க்ரைஸ்தவ மதம் வரவர லோபம் அடைந்து கொண்டே வருகின்றது. 'பஹுகாலமாக நமது ஆப்தர்கள் ஒரு விஷயத்தை விச்வஸித்து வந்தார்கள்; ஆகையால் நாமும் அதனை விச்வஸிக்கவேணும்' என்பது இக்காலத்திற்குத் தகுந்தது அன்று. குண தோஷங்களைப் பராமர்சித்தே இக்காலத்தில் ஒருவன் ஒரு விஷயத்தை நம்ப ப்ரவ்ருத்திப்பனே தவிர, பெரியோர்களுடைய அருளிச்செயல் என்பதனால் மாத்ரம் அதை நம்பிவிடமாட்டான். இம்மாதிரியான நோக்கத்தை இக்காலத்திய வித்யாப்யாஸ சைலியானது மிகவும் வ்ருத்தி செய்கிறது. அது காரணம் பற்றியே ஐரோப்பாவில் வேதத்திற்கு அவலம்பம் குறைந்துவிட்டது; இந்தியாவிலும் சீக்ரத்தில் வேதம் அநாதரிக்கப்படும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இந்தியர்களும் மற்றை ஜாதியர்களைப் போல மநுஷ்யர்களானதால், இவர்களிடத்தில் மாத்ரம், வேதம் கொஞ்சம் அதிக பலமான பிடிப்புடன் கவ்வி

நிற்கும் என்று சொல்வதற்கு ஹேது வொன்றையும் காணோம். குண தோஷ விவேசநத்திற்கு ப்ராதாந்யத்தைக் கொடுக்கும் இக்காலத்திய வித்யாப்யாஸரீதி அந்த மூட விஶ்வாஸத்தை வேரறுப்பாக அறுத்தே விடும்.

'வேதத்தை நம்புகிற ஒருவன் இருந்தால், அவன் அந்தக் கொள்கைகளை ஆதரிப்பதில் என்ன ஆக்ஷேப மிருக்கக்கூடும்?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். அவன் அவைகளை ஆதரிப்பதில் நமக்கு யாதொரு விவாதமுமில்லை; மற்றவர்களுக்கு அந்தக் கொள்கைகளை அவன் உபதேஶிக்க ஆரம்பிக்கும்பொழுதுதான் நம்முடைய விவாதம் உண்டாகின்றது. இப்பொழுது பங்காளத்தில் 'ஹிந்து யுநிவெர்ஸிடி' என்னும் பெரியதொரு பாடஶாலாஸ்தாநத்தை ஸ்தாபிக்க அநேக ஆஸ்திகர்கள் ப்ரயத்நப்படுகிறார்கள். அதில் வித்யார்த்திகளாக வரும் எல்லாரும் ஹிந்து வேத ஸம்பந்தமான உபதேஶத்தைப் பெற்றுக்கொள்ள வேணும் என்று ஒரு நிர்பந்தம் இருக்கின்றது. இந்த நிர்பந்தம், அல்ப ஜநங்களில் விஶேஷமாகக் காணப்படும் ஒரு க்ஷுத்ர நைஷ்டூர்யத்தை ஸூசிப்பிக்கிறதே தவிர, இக்காலத்திற்கு உரிய ஹ்ருதய வைஶால்யத்தைக் காண்பிக்க வில்லை. இந்த உபதேஶ நிர்பந்தத்தைக் காட்டிலும் சில அநுஷ்டாந நிர்பந்தம் இன்னும் அஸம்பத்தமாக இருக்கின்றது. 'ஆலிகர் காலேஜ்' என்னும் மஹம்மதிய பாடஶாலையில் வித்யார்த்திக ளெல்லாரும், மஹம்மதியர்களுடைய வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் ஜபத்தை ப்ரதிதிநமும் ஐந்து காலங்களிலும் அநுஷ்டிக்க வேண்டுமாம். அதே மாதிரி இந்த ஹிந்து யுநிவெர்ஸிடியிலும் ஸந்த்யாவந்தந அநுஷ்டாநமும் நிர்பந்திக்கப்படும். வித்யார்த்திகளாகச் சேர்பவரெல்லாரும் ஆஸ்திகர்கள் என்று சொல்லமுடியாததலால் இந்த அநுஷ்டாந நிர்பந்தம் அநார்ஜவ ஶிக்ஷணத்தில் பர்யவஸிக்கும் என்பதில் ஆக்ஷேபமேயில்லை. இது எப்படி தர்மமாகும்? ஶுஷ்க வேதாந்த விசாரத்தையும் புராண கதா படநங்களையும் அஸம்பத்தமான ஸந்த்யாவந்தநாத்யநுஷ்டாநங்களையும் விடப் பரோபகாரமும் ஸர்வபூத ஸௌஹார்த்தமும் ஸத்ய வசநாதிகளும் சிறந்தவையானால், இந்தத் தேஶத்தின் அபிவ்ருத்தியை ஹார்த்தமாக அபேக்ஷிக்கும் இந்த ஆஸ்திகர்கள் ஹிந்து யுநிவெர்ஸிடி ஆலிகர் காலெஜ் முதலிய பாடஶாலைகளில் வேத ஸம்பந்த ஶிக்ஷணத்தை நிர்பந்திக்காமல் ஸாமாந்ய தர்மங்களை உபதேஶிப்பதில் பத்த சித்தர்களாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய அபிப்ராயம்."

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமி.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

நாளது புரட்டாசி மாஸம் 20௳ ஞாயிற்றுக்கிழமை தினம் (5-10-13) ஸ்ரீ அஹோபில மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ஆதிவண்ஶடகோப ஜீயரின் திருநக்ஷத்ரம் ஸம்பவிக்கின்றது என்பதை எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அறிந்திருக்கக்கூடும். ஸமீபித்த காலத்தில் அவதரித்த நமது ஆசார்யர்களுள், ஸ்ரீ ஆதிவண்ஶடகோபஸ்வாமியே அநேக ப்ரகாரங்களில் சிறந்தவரென்

பதற்கு ஸந்தேஹமில்லை. தூரத்ருஷ்டியும், தத்வஜ்ஞானமும், ஸர்வஜநங்களுக்கும் உபகாரத்தைச் செய்யவேண்டுமென்கிற ஹ்ருதயமும், பூததயையும் இவரிடத்தில் குடிகொண்டிருந்தன. தென்கலையார் வடகலையார் என்று இருவகைப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பிந்ந அபிப்ராயத்தை மாற்றி, இரண்டு வகையாருடைய கொள்கைகளிலு முள்ள பொதுவான முக்ய அம்ஸத்தை க்ரஹித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை பேதமின்றிக்கே வ்யாபிக்கச்செய்ய முயன்றது மல்லாமல், தேஸபேத குலபேத பாஷா பேதங்களினால் வேறுபட்ட கன்னட மலையாள அரவ ஆந்த்ர தேஸவாஸிகளை ஒரே செங்கோலின் கீழ் ஐக்யப்படுத்திய விஜயநகர ஸம்ஸ்தாநத்திலுள்ள பிந்ந பிந்ந ஸ்ரீ வைஷ்ணவர்களையும் ஒன்று சேர்த்து அந்த ஸ்ரீவைஷ்ணவ மதத்தை ராஜாங்க மதமாகவும் செய்வித்தவர் இந்த மஹாந்தான். மலைகளிலும் காடுகளிலும் வஸிக்கும் வில்லியர் செஞ்சு ஜாதியாரையும், நாட்டில் வஸிக்கும் பஞ்சம வர்ணத்தாரென்று உபேக்ஷிக்கப்படுகிற பஞ்சமர்களையும்கூட கைநழுவவிடாமல், கொண்டதாஸரி (Hill-men Preachers) மால தாஸரி (Pariah Preachers) ஆகிய இருவகையரான மத போதகர்களைப் பயிர்ப்பித்து, அந்தப் போதகர்கள் மூலமாக அந்த ஜநங்களுக்கு ஆர்ய நாகரிகமும் ஸித்தாந்த ஜ்ஞாநமும் எட்டும்படி முதல் முதலில் ப்ரவ்ருத்தித்த உத்தமரும் இவரே.

இந்த யதீந்த்ரன், கன்னட தேஸமாகிய மைஸூர் ராஜ்யத்தில் ஜநித்து, அரவதேஸத்தில் பூர்வ வைஷ்ணவ ஆசார்யர்களின் முக்ய ஸ்தாநமாகிய காஞ்சீ நகரத்தில் வித்யாப்யாஸம் செய்து, ஆந்த்ர தேஸமாகிய பூர்வ விஜயநகர ஸம்ஸ்தாநத்திலுள்ள ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு முக்ய ஸ்தாநமாக வஹித்து, அவ்விடத்தில் பெரியதொரு மடத்தையும் பாடஸாலையையும் அக்ரஹாரத்தையும் ப்ரதிஷ்டை செய்து, ஸ்ரீ வைஷ்ணவ ஸாமாந்யத்திற்கும் பரம ஆசார்யனாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்ம அர்ச்சாவதார மூர்த்தியை எழுந்தருளப்பண்ணி, தென் இந்தியாமுழுவதும் க்ராமங்கள் நகரங்கள் தோறும் ஸஞ்சாரம் செய்து, ஸித்தாந்தத்தை உபதேஸித்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாருக்கும் பரம ஸ்ரேயஸ்ஸை ஸம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். மஹாராஜனாகிற க்ருஷ்ண தேவராயனது தண்டயாத்ரை ஸம்பத்தமும் ஸ்ரீ ஸ்வாமியினுடைய மதபோதனையாத்ரை ஸம்பத்தமுமான சரித்ரத்தை, விஜயநகர சரித்ரத்திலும் ஸத்ஸம்ப்ரதாய முக்தாவளியிலும் குரு பரம்பரா வைபவத்திலும் படிப்பவர்களுக்கு, ஸ்ரீ ஜீயரின் ஸித்தாந்த போதனையானது மஹாராஜனது திக்விஜய யாத்ரைக்குப் பூர்வ ஸூசகமாகக் காணப்படும்.

இந்த மஹாநுடைய திவ்ய சரித்ரம் ஸவிஸ்தாரமாயும் யதார்த்தமாயும் இவ்வளவு காலமாகியும் வெளிப்படாமலிருப்பது இந்தத் தேஸவாஸிகளுடைய அஸ்ரத்தையைப் புலப்படுத்துகின்றது. ஸ்ரீ ஜீயருடைய திருநக்ஷத்ர திநத்தை ப்ரபலமாகக் கொண்டாடிக் களிப்பதுடன் அவருடைய சரித்ரத்தையும் ஸுலக்ஷமாய் ப்ரசுரம் செய்வது அவஸ்யமென்று இந்தியாவின் ஸ்ரேயஸ்ஸைக் கோரும் தனவான்களை ப்ரார்த்திக்கிறேன்.

எல்லூர்,<br>
10—9—13 } டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யன்.

(கார்யதர்ஸி, ஸ்ரீ அ. ஸி. ஸபைப் பிரிவு, மஸூலிபட்டணம்.)